இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2022. Founded 19 Feb. 1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 146 | இதழ் : 10 | திகதி : 05.06.2022 | விலை : 30.00


## மெய்நிகர்வழி கல்வி, வகுப்பறைக்கல்வி போன்றதல்ல

### மாணவர்கள் சுயகட்டுப்பாட்டுடன் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும்

### யாழ் ஆயர் மாணவரிடம் வேண்டுகோள்



இன்று இலங்கைத்தீவு பல்வேறு சொல்லொணா துயரங்களைச் சந்தித்து வருகின்றது. குறிப்பாக அரசியல், பொருளாதார நெருக்கடிகளினால் எம் நாடு பின்நோக்கிச் செல்வது மிகவும் மனவேதனைக்குரியது.

இந்நிலையில் எமது மாணவர்களின் கல்வியும் வெகுவாக பாதித்து வருவதை நாம் உணருகின்றோம். இக் காலக் கல்வி முறைமையின் பிரதிபலிப்புக்கள் எமக்கு உடன் உணரமுடியாவிட்டாலும், எதிர்காலத்தில் இதன் பாரிய விளைவை நாம் சந்தித்தேயாகவேண்டும்.

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாகவும், பொருளாதார நெருக்கடி காரணமாகவும் பாடசாலைகள் ஒழுங்காக கல்வியாண்டின் அட்டவணைகளின்படி சீராக இயங்கவில்லை. பிள்ளைகள் கூடுதலான நாட்கள் வீடுகளில் இருந்தவாறு மெய்நிகர் வழி கல்வியினூடாகவே கல்வி கற்று வந்துள்ளனர். மெய்நிகர் வழிக்கல்வி வகுப்பறைக் கல்வி போன்றது அல்ல.

இடைவிதானச் செயற்பாடுகள் அற்ற மெய்நிகர் வழி கல்வியின் ஊடாக பிள்ளைகள் கற்பவற்றைப் பரீட்சையில் எழுதும் திறன் அற்றவர்களாகவும், பயிற்சிப் பரீட்சைகள் நடாத்தப்படாத நிலையில் தமது கல்வி நிலையை உணராத நிலையிலும், மற்ற மாணவர்களுடன் தம் கல்வி நிலையை ஒப்புநோக்க சந்தர்ப்பமற்ற சூழமைவிலுமே கல்வி கற்கின்றனர். இம் முறைமை பிள்ளைகளின் ஆளுமை வளர்ச்சியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனவே தற்காலப் பிள்ளைகள் காலத்தின் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு சுய கட்டுப்பாட்டுடன் தாம் கற்றவற்றை அமர்ந்திருந்து எழுதும் பயிற்சியை கூடுதலாகப் பெற்று, தமது கற்றல் வாழ்வில் முன்னேற வேண்டியவர்களாக உள்ளமை காலத்தின் தேவையாகும் என யாழ் ஆயர் அவர்கள் க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு வழங்கிய ஆசிச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## மரியாயின் சேனையினரின் ஆச்சேஸ் விழா



யாழ் மறைமாவட்ட மரியாயின் சேனையினரின் ஆச்சேஸ் விழா 22ஆம் திகதி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றது.

யாழ் மறைமாவட்ட மரியாயின் சேனை இயக்குநர் அருட்பணி றெஜி ராஜேஸ்வரன் அடிகள் தலைமைதாங்கி விழாத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். யாழ் மறைமாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரசீடியங்களிலுமிருந்து மரியாயின் சேனையினர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## ஊறணி அந்தோனியாருக்கு புதிய ஆலயம்



தன் சாம்பலில் இருந்து மீண்டு எழுந்த புராண காலத்து பீனிக்ஸ் பறவை போல், 2016 ஆம் ஆண்டில் தரைமட்டமாக்கப்பட்ட ஊறணி புனித அந்தோனியார் ஆலயம் (காங்கேசன்துறை) பலரது பங்களிப்பால் மீளக்கட்டி எழுப்பப்பட்டு, 30.04.2022 அன்று யாழ். ஆயர் பேரருட்திரு. கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் திறந்து வைத்து ஆசீர்வதிக்கப்பட்டது. இவ் ஆலயக்கட்டடப் பணிகளைப் பங்குத்தந்தை அருட்பணி தேவராஜன் அடிகளார் கச்சிதமாக மேற்கொண்டிருந்தார்

## புனரமைக்கப்பட்ட பத்தாவத்தை பிலிப்பு நேரியார் ஆலயம்



பத்தாவத்தை புனித பிலிப்பு நேரியார் ஆலயம் அழகிய தோற்றத்துடன் புனரமைக்கப்பட்டுக் கடந்த 25ஆம் திகதி யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் ஆசிர்வதித்துத் திறந்து வைக்கப்பட்டது.

திறப்புவிழாவைத் தொடர்ந்து திருநாளுக்கு ஆயத்தமான நற்கருணை விழாத் திருப்பலியை ஆயர் அவர்கள் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார்.

1700 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இவ்வூரைச் சேர்ந்த பாவிலுப்பிள்ளை என்பவரால் மண்ணால் கட்டப்பட்ட இவ்வாலயம் 1852 ஆம் ஆண்டு அருட்பணி எர்மினியோ குய்டி அடிகளால் கல்லால் கட்டப்பட்டு, பல்வேறுபட்ட காலப்பகுதிகளில் புனர் நிர்மாணம் செய்யப்பட்டது. இறுதியாக 2019ஆம் ஆண்டு யாழ் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்திரு ப.யோ. ஜெபரட்ணம் அடிகளால் அடிக்கல் நாட்டப்பட்டு அருட்தந்தை எட்விநாதன் அடிகளின் வழிகாட்டலில் முன்னெடுக்கப்பட்ட புனரமைப்புப் பணிகள் பங்கு மக்களின் நிதிப் பங்களிப்புடனும் ஒத்துழைப்புடனும் நிறைவடைந்து தற்போது இவ்வாலயம் புதுப் பொலிவுடன் காட்சி தருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## பேராலயத்தில் அன்பிய எழுச்சி மாதம் ஆரம்பம்





வணக்கமாதத்தின் இறுதி நாளில் செபமாலைப் பேரணியும் அதனைத் தொடர்ந்து அன்பிய எழுச்சி மாதத்திற்கான அங்குரார்ப்பணமும் மரியன்னை பேராலயத்தில் 31.05.2022 செவ்வாய்க்கிழமை அன்று பேராலயப் பங்குத் தந்தை அருட்பணி யோ.யோ. மவுலிஸ் அடிகளாரின் தலைமையிலும் உதவி பங்குத் தந்தையர்களின் ஒழுங்கமைப்பிலும் நடை பெற்றது.

அதனைத் தொடர்ந்து யாழ் மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை மில்பர் வாஸ் CMF அடிகள் தலைமையில் பேராலய அன்பியங்களுக்கான கொடிகள் ஏற்றி வைக்கப்பட்டு அன்பிய எழுச்சி மாதத்திற்கான அங்குரார்ப்பணமும் நடைபெற்றது.

## பல்லவராயன் டொன் பொஸ்கோவில் பயிற்சி நெறிகள் ஆரம்பம்

கிளிநொச்சி பல்வராயன்கட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ள டொன் பொஸ்கோ தொழிற் பயிற்சி நிலையத்தினால் நடாத்தப்படுகின்ற கணனி, தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியல், தையல், மின்னியல், ஆங்கிலம் ஆகிய கற்கை நெறிகளுக்கான புதிய வகுப்புக்கள் யூன் மாதம் 06 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன.

இப்புதிய வகுப்புக்களில் சாதாரண தரம் மற்றும் உயர்தரக் கல்வியை நிறைவுசெய்த மாணவர்களும் மற்றும் ஏனையவர்களும் இணைந்து கொள்ள முடியும். அத்துடன் தொலைதூரத்தில் இருந்து கற்க விரும்புகின்ற மாணவர்களுக்கான தங்குமிட வசதியும் ஒழுங்குகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## புதுப்பொலிவுடன் ஒட்டகப்புல அமலவுற்பவ அன்னை ஆலயம்



பருத்தித்துறை மறைக்கோட்டத்தில் அமைந்துள்ள ஒட்டகப்புலம் புனித அமல உற்பவ அன்னை ஆலயம் புதுப் பொலிவுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் கடந்த 28ஆம் திகதி ஆசீர்வதித்துத் திறந்து வைக்கப்பட்டது.

பழமை வாய்ந்த இவ்வாலயம் பங்குமக்களின் உதவியுடன் பங்குத்தந்தை அருட்பணி அலோய் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் அழகிய தோற்றத்துடன் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## அரசியல் தீர்வும் பொருளாதாரக் கட்டமைப்பும் சமாந்தரமாகச் செல்ல வேண்டிய காலமிது

பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை விடுத்து. அரசியல் யாப்பில் 21 ஆவது திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் அமுல்படுத்துவதிலேயே அரசாங்கம் கவனம் செலுத்துகின்றது. ஊழல்மோசடி, அதிகாரத் துஸ்பிரயோகத்தை இல்லாதொழிக்க வேண்டுமென்றால் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை மாத்திரம் குறைத்தல் அல்லது முற்றாக நீக்குதல் என்ற வாதம் ஏற்புடையதல்ல.

ராஜபக்ஷாக்கள் மாத்திரம் ஊரில்மோசடி, அதிகாரத் துஸ்பிரயோகத்தில் ஈடுபட்டார்கள் என்று குற்றம் சுமத்துவதை விடுத்து, ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தில் உள்ள முக்கியமான அதிகாரங்களை மாத்திரம் நாடாளுமன்றத்திற்குப் பாரப்படுத்த நினைப்பது அரசியல் சதுரங்க விளையாட்டைத் தவிர, ஆக்கபூர்வமான நடவடிக்கை அல்ல. மக்களின் பட்டினிச் சாவையும் தடுக்க இது யாத்தார்த்தமான ஏற்பாடுமல்ல.

ஆனால் இதனைப் புரிந்துகொள்ளாமல், சிங்கள அரசியல் தலைவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் அரசியல் எதிர்காலங்களை மாத்திரம் கருத்தில் எடுத்துக் காய் நகர்த்துகின்றனர். மக்கள் தற்போது எதிர்நோக்கும், வயிற்றுப் பசிப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமானால், கட்சி அரசியலுக்கு அப்பால் தேசிய அரசாங்கம் ஒன்றை உடனடியாக நிறுவ வேண்டும்.

ஆனால் பிரதான எதிர்க்கடசிகள் விதிக்கும் நிபந்தனைகள் அதற்குத் தடையாக இருக்கின்றன. தற்போதுள்ள நெருக்கடி நிலையில், நிபந்தனைகளைத் தவிர்த்து, ஒருமித்த குரலாகத் தேசிய நெருக்கடியை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும்.

இத் தேசிய நெருக்கடிக்கான தீர்வைக் காணுகின்ற அதே நேரம், எழுபது ஆண்டுகால இனப்பிரச்சினைக்கும் நிரந்தர அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும். ஏனெனில் தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி விலைவாசி உயர்வுப் பிரச்சினையின் மூல காரணம் முப்பது ஆண்டுகாலப் போர் என்பதை சிங்கள அரசியல் தலைவர்கள் அறியாதவர்கள் அல்ல. உலகத்துக்கும் அது தெரியும்.

எழுபது வருடங்கள் மாறி மாறி ஆட்சியமைத்த ஒவ்வொரு சிங்கள அரசியல் கட்சிகளும் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்க முற்படும்போது, எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் குழப்புகின்றனர். இனவாதமாகப் பேசியும் மக்களை உசுப்பேத்தியும், அடுத்து வருகின்ற தேர்தல்களில் வெற்றிபெற்று ஆட்சியைக் கைப்பற்றி விடுகின்றனர். இவ்வாறு எழுபது ஆண்டுகள் கடந்து விட்டன.

2009ம் ஆண்டுப் போருக்குப் பின்னரான சூழலிலும் அதாவது கடந்த பதின்மூன்று ஆண்டுகளிலும் மாறி மாறிப் பதவிக்கு வந்த சிங்கள அரசியல் தலைவர்கள் அவ்வாறுதான் செயற்பட்டனர். ஆகவே தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுன அரசாங்கம் பெரும்பான்மை இழந்து தவிக்கும் நேரத்தில், தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்து இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைத்தால், அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டும்.

இனப்பிரச்சினையினால் எழுந்த போரின் பக்க விளைவுகள் ஏராளம். அதில் ஒன்றுதான் தற்போது இந்த இலங்கைத்தீவு எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடி. போரையும் அதன் பின்னரான சூழலில், வடக்குக் கிழக்குத் தாயகப் பகுதியில் பௌத்த சமயத்தைப் பரப்புவது உள்ளிட்ட சிங்களக் குடியேற்றங்கள், இராணுவ முகாம் விஸ்தரிப்புகள் எல்லாமே தேவையற்ற செலவீனங்கள்.

இச் செயற்பாடுகளினால், வடக்குக் கிழக்கில் பொருளாதார அபிவிருத்தி ஏற்படவில்லை. குறிப்பாக சுயபொருளாதார அபிவிருத்திக்குரிய வழிகள் உருவாக்கப்படவில்லை. வரவுசெலவுத் திட்டத்தில் அதற்குரிய நிதிகள் ஒதுக்கப்பட்டிருக்கும். ஆனால் அவற்றைமுழுமையாகச் செயற்படுத்த முடிவதில்லை. பல வேலைத் திட்டங்கள் தத்தமது அரசியல் நோக்கில் பரபரப்பாகவும், சுய விளம்பர நோக்கிலும் முன்னெடுக்கப்பட்டன.

ஆகவே இவ்வாறான அரசியல் நோக்கிலான அபிவிருத்தித் திட்டங்கள் உண்மையான சுய பொருளாதார அபிவிருத்திக்கும் சுய பொருளாதார வளர்ச்சிக்கும் ஆராக்கியமாக இருக்காது. ஆகவே இனி வரும் காலங்களில் அரசியல் வேலைத்திட்டங்களை மக்களுடைய அபிவிருத்தி, பிரதேச அபிவிருத்தி, மக்களின் சுய பொருளாதார வளர்ச்சி போன்றவற்றுடன் இணைத்துக் கொள்ளாது, அதற்குரிய பொருளாதாரப் பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும்.

பொருளாதார வல்லுநர்களின் உதவிகளோடு அரசியல் கலப்பில்லாத உறுப்பினர்கள் பொருளாதாரப் பொறிமுறைக் கட்டமைப்புக்கு உள்வாங்கப்படுவதும் அவசியம். ஆகவே சமாந்தரமான முறையில் இனப்பிரச்சினைத் தீர்வும் பொருளாதாரப் பொறிமுறையும் இனமத வேறுபாடுகள் இன்றி உருவாக வழி ஏற்படுத்தப்பட வேண்டியது காலத்தின் அவசியம்.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

# யாழ் மரியன்னை பேராலயத்தில் இளையோர் தினம்

யாழ் புனித மரியன்னை பேராலய இளையோரின் 2022ம் ஆண்டிற்கான இளையோர் விழாவும் புதிய உறுப்பினர்களை இணைத்துக்கொள்ளும் நிகழ்வும் கடந்த மாதம் 29ந் திகதி ஞாயிற்றுக்கிழமை பேராலயத்தில் இடம்பெற்றது.

அன்று காலை பங்குத்தந்தை யோ.யோ.மவுலிஸ் தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினரிற்கான ஒன்றுகூடல் இடம்பெற்றது.

இவ் ஒன்றுகூடலில் பிரதம விருந்தினராக முன்னாள் உறுப்பினரும் யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலக ஓய்வு பெற்ற பிரதம கணக்காளருமான திரு கில்பேட் குணம் அவர்களும் சிறப்பு விருந்தினராக முன்னாள் உறுப்பினர் நித்திலா அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இந் நிகழ்வுகள் யாவும் பங்குத்தந்தை அருட்திரு யோ.யோ.மவுலிஸ் அவர்களின் நெறிப்படுத்தலிலும் உதவிப் பங்குத்தந்தை அருட்திரு யோண் குரூஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலிலும் மிகவும் சிறப்பான முறையில் இடம்பெற்றது.

இவ் நிகழ்வில் 20 உறுப்பினர்கள் புதிதாக இணைந்து கொண்டனர். இளைஞர் உருவாக்கல் இயக்கமானது 1978ம் ஆண்டு அப்போதைய உதவிப் பங்குத்தந்தை அருட்திரு R.H.சகாயநாயகம் மற்றும் யுவானியார் ஆலயப் பங்குத்தந்தை அருட்திரு நீக்கிலாஸ் அவர்களினாலும் இரு பங்குகளினதும் இளையோர்களை இணைத்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1980ம் ஆண்டு முதல் தனியாக இயங்க ஆரம்பித்த யாழ் புனித மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கமானது பல்வேறு சமூகம் சார் செயற்பாடுகளையும் ஆலயம் சார் செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றது.

இளைஞர் உருவாக்கல் இயக்கத்தில் இணைந்து பணியாற்றப் பேராலயப் பங்கைச் சேர்ந்த இளையோர் அமைப்பினர் அழைப்பு விடுக்கின்றனர்.


**கத்தோலிக்க அச்சகத்தில் விற்பனைக்கு**

- மோட்சபாதை
- செபப் புத்தகங்கள்
- மொழுகுவர்த்திகள்
- முதல்நன்மை சான்றிதழ்கள்
- திருச் செபமாலைகள்
- திருப்பலிப் பொருட்கள்
- திருப்பலி ஆடைகள்
- பரிசுப் பொருட்கள்

என்பவற்றை மலிவு விலையில் பொற்றுக்கொள்ளலாம்.



# 1ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 28 . 07 . 1955

இறைவன் அடியில் 17 . 06 . 2021



## துரைசிங்கம் இமல்டா மரீனா

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

அன்பிற்கு இலக்கணமாகவும்
அமைதியின் உருவமாகவும்
பாசத்தின் இருப்பிடமாகவும் எம்மை எல்லாம் வளர்த்து
ஆளாக்கிய தாயே நொடிப்பொழுதில்
நாம் எதிர்பாரா வேளை
எமை எல்லாம் துன்பத்தில் விட்டு
விண்ணகம் நோக்கிச் சென்றீரோ
அம்மா! இறைவனோடு வாழ உம் ஆன்மா
இறைவனின் சந்நிதானத்தில் இளைப்பாறப்
பரமனிடம் வேண்டி நிற்கின்றோம் தாயே!

AD- 49

4ம் வட்டாரம்,
மண்டைதீவு.

பிரிவால் துயருறும்
அன்புக் கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரி, உறவினர்கள்



# விண்ணக வாழ்வின் இரண்டாம் ஆண்டு நினைவு

தாய் மடியில் 16 • 12 • 1924

இறை அடியில் 10 • 06 • 2020



## அமரர் திரு.இறமேந்து தேவசகாயம்

(ஓய்வுநிலை அதிபர்)

'ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம்
நான் குடியிருக்க வேண்டும்' (திப.27:4)

அன்பான இறைவா!

இவ் உலகிலிருந்து உம்மிடம் அழைத்துக் கொண்ட உமது அடியான் அமரர் இறமேந்து தேவசகாயம் அவர்களை உமது நித்திய வான்வீட்டில் சேர்த்தருள வேண்டுமென்று இரந்து மன்றாடுகின்றோம். ஆமென்

3ம் வட்டாரம்,
மண்டைதீவு.

AD-46

இவரது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

# ரஷ்ய தேசம் – சிங்கள தேசம்

## — ஓர் ஒப்பு நோக்கிய பார்வை

(சென்ற இதழின் தொடர்ச்சி)

(சென்ற இதழில் கூறியது போல இது போரை மையப்படுத்தி மட்டுப்படுத்தப்பட்ட ஓர் ஒப்பு நோக்கு)

### Post Truth

முன்னைய வட அமெரிக்கவின் சனாபதி டொனால்ட் றம்பின் ஆட்சிக் காலத்தில், வட அமெரிக்க பென்சில் வேனிய பல்கலைக்கழக பேராசியரியர் ஒருவர் ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதினார். ஆதன் பின்னணியில் ஒரு நூல் வெளிவந்தது. அந்த நூலின் பெயர் ‘Post Truth’ தமி ழில் மொழிபெயர்த்தால் ‘உண்மையின் பின்” என்று கூறலாம். இந்நூலின் உப தலைப்பு “How bullshit conquered the world” இதை மொழிபெயர்ப்பின் - “மடமைத்தனம் எங்ஙனம் உலகத்தை வென்றது!” நூலா சிரியரின் பெயர் James Ball. இவற்றின் அர்த்தம் என்ன? பொய் என்று சொன் னால் அதன் மறுபக்கம் உண்மை என்ற ஒன்று உண்டு. ஆனால், Post Truth என்றால் உண்மையை மறுப்பது, நடந் ததை நடக்கவில்லை என்பது. நடக்கா ததை நடந்தது என்பது. ஆகவே, இந்த நூலா சிரியரின் கருத்துப் படி பொய்யை விட உண்மையை மறுப்பது கெடுதியானது.

ஈழத்து போரில் நடந்தேறிய கொடூரங்களை, கொடுமைகளை, ஆயிரக் கணக்கான மக்களை அழித்தமை, இரா ணுவத்தினர் உளவள நோயாளிகளாக மாறியமை (பெண்களை நிர்வாணமாக்கிச் சுட்டமை) அனைத்தையுமே இன்று வரை பௌத்த மத பீடங்கள் மறுத்துள்ளன. பேராயர் மல்கம் மறுத்துள்ளார். கத் தோலிக்கப் பேரவை பயங்கர மௌனம் சாதிக்கின்றது. மறுப்பின் பயங்கர மௌனம் கெடுதியானது.

இவ்வளவு நடந்த பின்னரும், பௌத்த சிங்களம் பேசி, புலிகளை வெற்றி கொண்டமையை நிலைநாட்டி ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாயாவை ஆதரித்துப் பேசிய பேராயர் இன்று எங்கு நிற்கிறார்? என்ன சொல்லுகிறார்?

மதமும் அரசியலும் கூட்டுச்சேரக் கூடாது என்பதையே இந்நிகழ்வுகள் எடுத்துரைக்கின்றன. பாடங்கள் கற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

இன்று இந்த நாடு ஒரு தரித்திர நிலைக்கு வந்து, மக்கள் வீதிக்கு வந்த மைக்கு பௌத்த பீடங்களும், கத்தோலிக்க ஆயரவையும், இராஜபக்ஷாக்களும், அவ ரது சகாக்களும், அவர்களுடைய தொண்ட வர்களும் பொறுப்புக் கூற வேண்டும். காரணம், நேற்றுவரை இவர்கள் இராஜ பக்ஷாக்களை ஆதரித்தவர்கள், ஆசீர்வதித் தவர்கள். வீதிக்கு வந்த இளைஞர்கள் தான் இவர்களின் கும்பகர்ண தூக்கத்தைக் குழப்பினவர்கள். கும்பகர்ண தூக்கம் என்றால் என்ன? இராவணனுக்குப் பயந்து, போருக்குச் செல்ல அஞ்சி தூங்குவது போல கும்பகர்ணன் நடித்தான். கும்பகர் ணத் தூக்கம் ஒரு வகையில் Post Truth தான்.

### “அகதிகள்”

ரஷ்ஷியாவின் மூர்க்கத்தனமான படையெடுப்பாலும், குண்டுத்தாக்குதலா லும் உக்ரைன் மக்கள் “அகதிகள்” ஆகி னர். ரஷ்யா ஒரு ஆக்கிரமிக்கும் நாடாக வல்ல, ஆனால் தன்னைக் காக்கும் நாடாக வேண்டும். என்று ரஷ்ய எழுத்தாளர். ரோல்ஸ் ரொய் (Tolstoy) கண்ட கனவை புட்டீன் சிதைத்து விட்டான். “ரஷ்யாவுக் குப் போர்கள் தேவையா?” என்ற மிகப் பிரசித்தி பெற்ற பாட்டு இனி மௌனிக்கப் படும். இந்த “அகதிகள்” என்ற சொல் மனி தரை மாக்களாக்கும் சொல். பெயரை நீக்கி, அவரவருடைய ஆளுமையை அழித்து, எல்லோரையும் ஒரு கூடையில் போட்டு “அகதிகள்” என்றழைப்பதே ஒரு சிறுமைப் படுத்தும் சொல். முதியோரும், குழந்தை களும் உக்ரைனை விட்டு வெளியேறும் காட்சிகள் மனதை உருக்காமல் இல்லை. ஆண்கள் போராடுவதற்காக நாட்டில் நிற் கிறார்கள்: தாய், தந்தையர்க்கும், தங்கள் குழந்தைகளுக்கும் முத்தமிட்டு பயணம் அனுப்பும் காட்சிகள் கண்களைக் குளமாக் குகின்றன. ஈழத்தில் நடை பெற்ற நீண்ட காலத்துப் போரால் அகதிகளாக்கப்பட்ட தமிழர்களை நினைவு கூராமல் இருக்க முடியவில்லை.

### அதிலும் ஒரு வேறுபாடு

உக்ரைன் நாட்டு மக்கள் அகதி களாக்கப்பட்ட பொழுது, அவர்களை அண்டை நாடுகளுக்கு அழைத்துச் செல்ல “சொகுசு” வாகனங்களும், நாட்டின் வசதியான மின் ஊர்திகளும் பயன்பட்டன. இவர்களை வரவேற்ற ஐரோப்பிய நாடுகளும் தயாரா-



கின. ஆனால், எம்மக்களுக்கு அவ்வாறு அமையவில்லை. கால் நடையாகவும், பயங்கர கடற் பயணங்களாகவுமே வலித் தன. எந்த நாடும் எம்மக்களை வர வேற்கமுன்வரவில்லை. “பொக்குள்கொடி” பேசும் தமிழகமே முன்வரவில்லை. தமிழ் நாட்டுத் தமிழர்கள், ஈழத்தமிழர்களை சிறுமைப்படுத்தினர், அடிமைகளாக்கினர். செய்த வேலைகளுக்கு ஊதியம் கொடுக்க மறுத்தனர்.

தென்னகத் திருச்சபை மறுபக்கம் பார்த்தது. இப்படிப்பட்ட நேரங்களில் தென் னகத் திருச்சபை கிறிஸ்துவை மறுதலிப் பது புதிதொன்றுமில்லை. 1958ம் ஆண்டு ஆரம்பித்த தமிழின அழிப்புத் தொட்டு இன்று வரை தென்னகத் திருச்சபை தமி ழரின் படிப்படியான இன அழிப்பையிட்டு குரல் கொடுத்த வரலாறு இல்லை. ஒரே ஒரு விதிவிலக்கு, 1977ம் ஆண்டு சிங்கள வர் தமிழர்களைக் கொலை செய்ததை யும், அவர்களுடைய கடைகளையும், வீடுகளையும் சூறையாடி எரித்ததையும் பார்த்து அந்தநாள் பேராயர் நிக்கிலஸ் மார்க்கஸ் அவர்கள் வானொலியில் குரல் கொடுத்தார். அவரது சிற்றுரையின் முதல் வசனம்: “ஒரு மிருகக் கூட்டம் இன்னொரு மிருகக் கூட்டத்தை திட்டமிட்டு அழித்ததாக உலக வரலாறு இல்லை.” இந்த நிகழ் வொன்றே விதிவிலக்காக நிற்கிறது. இவ்வுரையின் பின் பேராயர் நிக்கலஸ் மார்க்கஸ் சிங்களக் குருக்களால் மௌனிக் கப்பட்டார். கார் மேகங்களிடையே ஒரு வெள்ளிக் கோடாக இருந்ததும் அழிந்தது.

### ஊடகங்களின் செயற்பாடு

உக்ரைனில் நடைபெறும் அத் தனை நிகழ்வுகளையும் நித்தமும் தொலைக்காட்சியில் (உ.ம். பி.பி.சி) வழி யாக, வானொலி வழியாக, நாளேடுகள் வழியாக நாம் அறிந்து கொள்ளுகின் றோம். ஏன், ரஷ்யாவில்நடைபெறுவனவற் றையும் ஓரளவு அறிய முடிகின்றது. வெளி நாட்டு ஊடகங்கள் அங்கு சென்று அங்கு நடை பெறும் அத்தனை நிகழ்ச்சிகளையும் உடனுக்குடன் உலகறியச் செய்கிறார்கள்.

ஆனால், ஈழ மண்ணில் நடந்த கொடிய போரை இன அழிப்பை, பாட-சாலைகள், கோவில்கள் மேல் குண்டு பொழிந்தமை எதையுமே வெளிநாடுகள் காணவில்லை. ஏன் வடகிழக்குக்கு வெளியே உள்ள இந்நாட்டு மக்களே காணவில்லை, அறியவில்லை. அப்படிப் பட்ட ஓர் ஊடகத் தடையை சிங்கள அரசு - இராஜபக்ஷாவின் அரசு விதித்திருந்தது. தென்னக ஊடகங்களே வன்னிக்குள் வரவில்லை. வர முயற்சிக்கவும் இல்லை. பேராயரின் மறை மாவட்ட ஏடுகள் கூட வன்னி வந்து நேரடியாக நடந்து கொண்டிருக்கும் போரைப் பார்த்து எழுத வில்லை. சிங்கள எடுகள் தங்களைத் தாங் களே தணிக்கை செய்து கொண்டு, உண் மைக்கு மாறான செய்திகளைப் பிரசுரித்து இனத் துவேஷத்தை வளர்த்தது ஆயர் பேரவைக்குத் தெரியாதா? இன்று வரை உண்மையை எழுதியதாகத்தெரியவில்லை. ஆனால் போர் முடிந்ததும், நன்றித் திருப் பலிகளை நடாத்திய குருக்கள் தென்னகத் தில் இருக்கிறார்கள். ‘கிரிபத்’ கொடுத்த கோவில்களும் உண்டு. ஆகவே, போரொன்று நடந்தது தெரியுந்தானே? வேடம் கலைந் தது. இலங்கை கத்தோலிக்க ஆயர் அவை சக தமிழ் பேசும் ஆயர்களிடமிருந்து உண்மையை அறிய முயன்றார்களா? இன்று அவசர மடல் எழுதிய ஆயர் அவை இதுவரை இந்நாடு இந்த நிலைக்கு வரக் காரணமென்ன என்று சிந்தித்து எழுதினார்களா? சிறுபான்மை பெரும் பான்மை என்று பிரித்து, சிறுபான்மை சனங்களை இடக்கி ஒடுக்கி அழிக்க முனை யும் இந்த நாடு வளர்வதற்கு வாய்ப்பில்லை. என்பது ஆயர் அவைக்குத் தெரியாதா? சிங்கள பௌத்த வெறி கொண்ட நாடு, ஒரு நாடாக வாழ முடியாது. சிறுபான்மை மதங்களை அழித்து பௌத்தம் வாழ முடியாது. தனது மறைமாவட்ட கத்தோலிக்க ஆலயங்கள் அதுவும் கிறிஸ்தவர்களின் முக்கியமான ஒரு திருநாளில், பக்தர்களால் நிரம்பி வழிந்த ஆலயங்களை திட்டமிட்டு குண்டு வைத்து தாக்குமட்டும் பேராயர் கும்பகர்ண உறக்கத்தில் இருந்தாரா? இந்தப் பாரிய தாக்குதலின் பின்னர் வீதிக்கு வந்த ஆயர்களும், குருக்கள் துறவிகளும் இன்னமும் இந்த நாட்டுப் பிரச்சனையை உணரவில்லையா? உணர மறுக்கிறார் களா?

இந்த நாட்டில் ஒருவனோ, ஒருத்தியோ அடிமையாக நடத்தப்பட்டால், இந்த நாடே அடிமையாகவே இருக்கும். (யாரோ சொன்னதை நான் எங்கள் நாட்டிற்குச் சொல்லுகின்றேன்). சுதந்திரம் பெற்று எழுபத்து மூன்று ஆண்டுகளாக எந்த வளர்ச்சியையும் காணாத இந்த நாடு, இன்று ஒரு பிச்சைக்கார நாடாக குறைந்துள்ளது. தொடர்ந்தும் பிச்சை வாங்கியே திரியும். ஆயர் பேரவையே! இனியாவது விழித்தெழுங்கள். ஒரு பக்க சார்பாக நீதி கேட்கும் நீங்கள் உங்க ளையே காட்டிக் கொடுக்கிறீர்கள். குண்டு வைத்து அழிக்கப்பட்ட ஆலயங்களுக்கும், கொல்லப்பட்ட மக்களுக்கும் நீதி கேட்டு உரோமைக்கும் ஜெனிவாவுக்கும் சென்றீர் கள். ஆனால், ஓர் உண்மையை மறுத்து விட்டீர்கள். இந்த உண்மையை இரு கோணங்களில் பார்ப்போம்.

ஒன்று, எந்த ஜெனிவாவிற்குச் சென்று நீங்கள் உங்கள் ஆலயங்கள் மக்களுடன் தாக்கப்பட்டமைக்கு மட்டுமே நீதி கேட்டீர்களோ இராஜபக்ஷாக்களின் மனித உரிமை மீறல்களை, காணாமல் ஆக்கப்பட்டோரை, முள்ளிவாய்க்கால் இன அழிப்பை, வடக்கிலும், வன்னியிலும் கத் தோலிக்க ஆலயங்கள் மக்கள் உட்பட இராஜபக்ஷாவின் வான் படை குண்டு போட்டுத் தாக்கியமை அத்தனையும் அதே ஜெனிவாவுக்கு ஆதரங்களோடு தெரியும். நீங்கள் இவைபற்றி ஏன் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை என்பதுவும் அந்த ஜெனிவாவுக்குத் தெரியும். ஆகவே, உங் கள் நீதி ஒரு பக்கச்சார்புடையதென்றும் அந்த ஜெனிவாவிற்கு தெரியும்.

இராஜபக்ஷாக்களின் ஆட்சியில் நடைபெற்ற பாரிய கொலைகளுக்கு, இன அழிப்பிற்கு உள்நாட்டில் என்றுமே நீதி திடைக்காது என்று எண்ணி, சர்வதேச நீதிமன்றம் செல்வதற்கு முனைந்த தமிழ்த் தரப்பிற்கு நீங்கள் என்ன சொன்னீர்கள்? அந்த நாள் ஞாபகம் இன்று உண்டா? “எங்கள் நாட்டில் சட்ட வல்லுனர்கள் உள்ளார்கள். நீதித்துறை திறம்பட செயற்படுகின்றது. ஆகவே, உள்நாட்டு விசாரணையே போதும். சர்வதேசத்திடம் செல்லத் தேவை இல்லையென்றே அடித் துச் சொன்னீர்களே! அன்று நீங்கள் இராஜபக்ஷாக்களைக் காப்பாற்ற முனைந்து அரசியல் செய்தீர்கள். இன்று... என்ன அரசியல் செய்கிறீர்கள்? இதுவும் ஜெனீவா விற்குத் தெரியும். நீங்களே உங்கள் அரசியலை காட்டிக் கொடுத்துவிட்டீர்கள்.

இரண்டாவது: ஓர் ஆன்மீக ரீதி யாக உங்கள் நீதி கோரும் செயலைப் பார்ப்போம். நீதி ஓர் ஆன்மீகச் சொல். வெறும் அரசியல் சொல் மட்டுமல்ல. நீதி, உண்மை, அமைதி, அன்பு போன்ற அனைத்தும் ஒன்றோடொன்று தொடர்புடை யவை, இணைந்தவை. ஆகவே அவை முழுமையானவை. நீதி முழுமையா-னது. அந்த முழுமையை மறுத்து, ஒரு சார்பான அதாவது நீதி கேட்கும் பொழுது, அதாவது அநீதி செய்யும் ஓர் அரசின் ஒரு பக்க அநீதியை மடடுமே சுட்டிக்காட்டி நீதி கேட்கும் பொழுது முழுமைக்கு களங்கம் ஏற்படுகின்றது. அங்கு உண்மையான நீதி கிடையாது. அநீதியாக நடந்து கொண்டு, நீதி கேட்பது வேடிக்கையானது மட்டுமல்ல, அது இரட்டை வாதத்தில் மூழ்குவது ஆகும்.

**கரைவையூர்ச் செல்வம்**

### பிற்சேர்க்கை


பல்வேறு நாடுகளின் உதவி-யோடு ஆயிரக்கணக்கான மக்களை கொத்துக் கொத்தாகக் கொலை செய்து புலிகளின் படையைத் தோற்கடித்து முள்ளிவாய்க்காலை தமிழர் வரலாற்றில் ஒரு மறக்க முடியாத நாளாக்கியது இராஜ பக்ஷாக்களின் கொடூர இன அழிப்பு. கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக இத்தி னத்தை (மே 18ம் நாள்) நினைவு கூர, இறந்தோருக்கு அஞ்சலி செலுத்த இராஜபக்ஷ அரசு மறுத்து வந்தது. இவ் வருடம் புதிய பிரதமர் அனுமதி அளித் தார். புதுமை என்னவென்றால், கொழும் பில் அதுவும் கோத்தா கோ கமத்தில் சிங்கள இளைஞர்களுடைய பங்கெடுப்புடன் முள்ளி வாய்க்கால் நினைவு நாளை அனு சரித்து இறந்தோருக்கு அஞ்சலி செலுத்தி முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பங்குகொண் டோருடன் பகிரப்பட்டது. சிங்கள இளை ஞர்கள். இறந்தோரை நினைவுகூருவது தானே என்ற நினைப்பில் மட்டும் பங்கு கொண்டார்களா, அன்றேல் முள்ளிவாய்க் காலில் தமிழினம் எங்ஙனம் கொல்லப் பட்டது. யாரால் கொல்லப்பட்டார்கள் என்ற உண்மையை ஏற்று பங்கு கொண் டார்களா என்பதில் எனக்குத் தெளி வில்லை. காலம் பதில் சொல்லும்.

(தொடர்ச்சி 11ம் பக்.)

# காவலன் கலசம்

மனிதப் படைப்பினது அடிப்படையும் அதன் வழிமுறைகளும் வெறும் சீர்ப் பிரகாரமான அல்லது ஊனியல்பின் செயல்பாடுகளோடு மட்டுமான ஒன்றல்ல. அவ்வாறு இருக்குமென்றால் படைத்தவனுக்கும் படைப்புக்கும் படைப்பின் நோக்கத்துக்கும் எந்த உறவும் நிறைவும் இருக்காது. ஆனாலும் இன்றைய மனிதர்களான நமது நிலை பெரும்பாலும் உடல்சார் தேவைகளையும் உலக ஆசாபாசங்களையும் மட்டும் அனுபவிப்பதோடு கடந்து போய்விடுகிறது.

ஆனால், மனிதப் படைப்பின் அடித்தளம் ஆவி, ஆத்மா, சரீரம் என்ற முப்பொருளின் கூட்டமைப்பாக



# வலுவூட்டும் ஆவியார்

இருப்பதை நாம் உணர்ந்தும் உணர்வற்றவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கிறோம். மனித வாழ்வின் உண்மைப் பொருளான - இயங்கு சக்தியான ஆவியையும் ஆன்மாவையும் மறந்துபோய் வெறும் சீர பெலத்தை மட்டுமே நம்பி, அதிலேயே தங்கி வாழ்வதால், இறை அனுபவத்தின் உண்மையையும் மெய்மையையும் உணரமுடியாதவர்களாக - உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்குகளிலே வீழ்ந்து கிடப்போராக நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

நமக்குள் ஆன்ம, சரீர இயங்கு சக்தியாக, வல்லமையாக விளங்கும் அந்த ஆவியானது, மனிதன் மண்ணால் படைக்கப்பட்டபோதே, அவனுக்குள் இறைவனால் ஊதப்பட்டு, அவனை இயங்க வைத்த, அதி உயர் சக்தியாகும். அது ஒவ்வொரு மனிதனையும் ஏன் உங்களையும் என்னையும் கூட இந்த நிமிடம் வரை இயக்கிக் கொண்டே இருக்கிறது. நாம்தான் அந்த உயிரான, வல்லமையான ஆவியை செயலற்றதாக்கி, சார்ஜ் போனவர்களாக மாறிவிட்டோம். இதனால், ஆத்மாவின் இயங்கு சக்தியை இழந்து ஆவியார் நமக்குள் பொதிந்து வைத்திருக்கும் வல்லமைகளை செயலற்றதாக்கி விடுகிறோம்.

மனிதனில் உயிர்மூச்சை ஊதி, அதாவது ஆவியை ஊதி, உயிரூட்டி மண்ணாலான மனிதனை இறைவன் இயங்க வைக்கிறார். இதுவே தொ.நூ 1:2 கூறும் கடவுளின் ஆவி.

இருள் மண்டிப்போய் வெறுமையாகிக் கிடந்த மண்ணுலகில் படைப்புக்கு முன்னே நீரின் அடித்தளத்தில் இயங்கி அசைவாடிக் கொண்டிருந்தது கடவுளின் அந்த ஆவி ஒன்று மட்டுமே. மனிதனுக்குள் நிலைத்திருக்கும் அந்த ஆவியை, அலகையின் வலைக்குள் வீழ்ந்து, அவரது இறை கட்டளைகளுக்கு எதிராக நடந்து, உறங்கு நிலைக்கு தள்ளிவிட்டோம். ஏன் மனிதனைப் படைத்தோம் என்று கடவுளே துயரப்படுமளவுக்கு நடந்து கொண்டோம். அதனால் கடவுள் அனுப்பிய தண்டனைகளையும், பேரழிவுகளையும் மனித குலம் சந்தித்தது. அவற்றைத் தாங்கமுடியாமல் மனித குலம் அழுதபோதெல்லாம் கடவுள் மனமிரங்கி நீதித் தலைவர்களை எழுப்பி, நாம் மறந்துபோன அதே ஆவியை, வல்லமையை அவர்களுக்குள்ளே நிரப்பி, மனிதரை ஆவியின் வல்லமையால் நிரப்பி, இறை உறவிலும் ஆத்ம பலத்திலும் வைத்திருப்பதை நாம் காண்கிறோம். இறைவாக்கினர்களூடாகவும் இறைவன் இதையே செய்தார்.

புதிய ஏற்பாட்டில் பாவத்தின் பிடியிலே சிக்கி, இறைவனையும் அவர் அருளிய தூய ஆவியின் நிறைவையும் மறந்து, காணாமல் போன ஆடுகளாக, ஊதாரிகளாக அலைந்த நம்மை மீட்க, அந்த ஆவியானவரின் வல்லமையை நிலைநாட்டுவதை நாம் அவதானிக்கலாம். நீரில் அசைவாடிக்கொண்டிருந்த அதே தூய ஆவியின் வல்லமையால் அன்னை மரியாவின் வயிற்றிலே மீட்பராக மனுவுரு எடுத்த இயேசுவையும் அதே ஆவி, அவருடனிருந்து, முழு நிறைவோடும் வழி நடத்துவதை நாம் காண்கிறோம். இயேசு திருமுழுக்குப் பெற்றபோது, அதே ஆவி புறா வடிவில் அவர் மீது இறங்க, இறைத்தந்தை அவரை மாட்சிப்படுத்துகிறார்(மத்.3:16இ17). அதன்பின் இயேசு அலகையால் சோதிக்கப்படுவதற்காக பாலைவனத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறார்.(மத் 4:1)

**அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம்**

இவ்வாறு, தந்தையால் தனக்குள் நிரப்பப்பட்டு, தன்னை இயக்கி வழிநடத்திய அதே ஆவியை, சிலுவையில் தொங்கும்போது, “தந்தையே! எனது ஆவியை உமது கரங்களில் ஒப்படைக்கிறேன்” என்று மீள ஒப்புவிப்பதை லூக்கா நற்செய்தியில் படிக்கிறோம். மரித்து உயிர்த்த பின் கூட, தாம் வாக்களித்தபடி அதே ஆவியாரை அனைத்தையும் கற்றுத்தரும் துணையாளராக உலகுக்குத் தருவதையும் அதனூடாக, திருத்தூதர்கள் ஆத்ம சரீர பலம் பெற்று, துணிவோடும் வல்லமையோடும் பணிபுரிவதையும் வேதம் தெளிவாகச் சொல்லுகிறது. எனவே, இவற்றின் மூலம் மனிதனுக்குள் ஊதப்பட்ட கடவுளின் ஆவியே வல்லமை, பலம், துணிவு போன்றவற்றின் ஒட்டுமொத்த இயங்கு சக்தி என்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளமுடியும். இந்த நிலையை அடைவதற்கு ஆவி, ஆத்மா, சரீரம் ஒன்றிணைந்த பூரண மனித நிலையை அடைவதற்கு பாவப்பட்டுப்போன நம் வாழ் வைப் பரிசுத்தப்படுத்தி, உள்ளத்தின் கடினங்கள் உடைக்கப்பட்டு, திறக்கப்பட்டு, வெறுமையாக்கப்பட்டு, உலக ஆசாபாசங்களால் அடித்தளத்தில் அமிழ்ந்துபோன தூய ஆவி...

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

## ‘திருமறை முத்துக்கள்’

அருட்பணி. நே. யூட்நாஸ்

### நம்பிக்கை அறிக்கையின் ஒன்பதாம் பிரிவு

**132. உத்தரிப்பு ஸ்தலம் என்றால் என்ன?**

ஒரு மனிதன் இறந்த பிற்பாடு அவனுடைய ஆன்மா தனது பாவக்கணக்கைத் தீர்த்துக் கொள்வதற்காக ஒரு குறிப்பிட்ட காலம் தங்கியிருக்க வேண்டிய இடம் உத்தரிப்பு ஸ்தலம் என அழைக்கப்படுகிறது.

**133. எவ்வாறான ஆன்மாக்கள் உத்தரிப்பு ஸ்தலத்திற்குச் செல்கின்றன?**

அற்ப பாவத்தோடு இவ்வுலகை விட்டுச்செல்லும் ஆன்மாக்கள் உத்தரிப்பு ஸ்தலத்திற்குச் செல்கின்றன. அல்லது செய்த பாவங்கள் மன்னிக்கப்படுகின்ற போதும் கொடுக்கப்படும் உலகுசார் தண்டனையை முழுமையாக நிறைவேற்றாத ஆன்மாக்கள் உத்தரிப்பு ஸ்தலத்திற்குச் செல்கின்றன.

**134.முடிவுள்ள தண்டனை என்றால் என்ன?**

இவ் உலகிலோ அல்லது மறு உலகிலோ ஒரு தண்டனைக்கு முடிவு இருக்குமாயின் அத் தண்டனை முடிவுள்ள தண்டனை என அழைக்கப்படுகிறது.

**135.உத்தரிப்புஸ்தலம் உண்டு என்பதை நீர் எவ்வாறு உறுதிப்படுத்துவீர்?**

தாய்த்திரு அவையின் தொடர்ச்சியான போதனைகளினூடாகவும் திருவிவிலியத்தின் வார்த்தைகளிலிருந்தும் உத்தரிப்பு ஸ்தலம் உண்டு என உறுதிப் படுத்தலாம். அவனவன் செயல்களுக்கேற்ப ஒவ்வொருவருக்கும் இறைவனால் பலன் வழங்கப்படும். “தீட்டுப்பட்ட தெதுவும் ஒரு போதும் அதில் நுழையாது. அது போல் அருவருப்பானதைச் செய்வோரும் பொய்யரும் அதில் நுழையமாட்டார்கள். ‘நெருப்பினால் சுத்திகரிக்கப்பட்டோர் மீட்கப்படுவார்கள். போன்ற விவிலிய வார்த்தைகளினூடாகவும் உறுதிப்படுத்தலாம் (காண். மத்தேயு16:27, திருவெளி. 21:27, 1கொரிந்தியர்3:15).

### நம்பிக்கை அறிக்கையின் பத்தாம் பிரிவு

**136.நம்பிக்கை அறிக்கையின் பத்தாம் பிரிவு என்ன?**

பாவ மன்னிப்பை நம்புகிறேன்.

**137.பாவ மன்னிப்பை நம்புகிறேன் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?**

பாவ மன்னிப்பை நம்புகிறேன் என்பதால் நான் விளங்கிக் கொள்வது யாதெனில் கிறிஸ்து பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தைத் திரு அவையின் பணியாளர்களுக்கு விட்டுச் சென்றார் என்பதாகும் (காண். யோவான் 20:23).

**138.பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வழி முறைகள் எவை?**

திருமுழுக்கு, ஒப்புரவு அருளடையாளங்களினூடாக பிரதானமாகப் பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளலாம். (தொடரும்...)

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

12

நான் குருவாகி ஓர் இறையியலாளராக
உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும்
ஆசிய நாடுகளின் அடிப்படையிலும்,
எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல்
சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன்.
அவற்றை இங்கே தருகின்றேன்.

*- அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்*

### அத்தியாயம் 7

**7.6 மாற்றங்களை ஊக்கப்படுத்த, ஒழுங்குபடுத்த, தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் மையங்கள்**



இப்படியாக மொழியிலும், தமிழ் அடையாளங்களாலும் எங்களுடைய இறைவணக்கமும், வழிபாடுகளும் தமிழ்ப் பண்பாட்டு மயமாக்கப்பட்டு, செழிப்பாகப் பயனுள்ளவையாக மாறியிருக்கின்றன. விசேடமாக எமது கிறிஸ்தவத்திலும் திருஅவைகளினதும் ஐரோப்பிய முகம் குறைந்து, தமிழ் உருவம் தெளிவாகின்றது.

ஆனால் மேற்கூறிய நல்ல மாற்றங்கள், 2ஆம் வத். சங்கம் எமது திரு அவைகளுக்குக் காட்டிய ஆழமான சீர்திருத்த வழிகள் பலவற்றை, இன்னும் முழுமையாக உணர்ந்து கொள்ளவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. பண்பாட்டு மயமாக்குதல்! என்ற தலைப்பில் நாம் தமிழ்ப் பண்பாட்டின் சில பகுதிகளையே, அதாவது வழிபாட்டின் மொழி, சங்கீதம், சைக்கினைகள், போன்ற சிலவற்றை மாற்றியிருக்கிறோம். ஆனால் பண்பாடு (culture) என்ற வார்த்தையைச் சங்கம் விளக்கும் பொழுது, பண்பாட்டின் வழியாகத்தான், அதாவது இயற்கைப் பொருட்களையும், ஆற்றல்களையும், சூழலையும் வள முறச் செய்வதன் வழியாகத் தான், மனிதர் உண்மையான, முழுமையான, மனிதத் தன்மையை அடைய முடியும் என்று விளக்கியது. இந்நோக்கத்தை தெளிவுபடுத்த 1975ஆம் ஆண்டில், - நற்செய்தி பரப்புதலும் பண்பாடும் - (Evangelisation and Culture) என்ற தலைப்பில் ஆயர் மன்றத்தை (Bishops Synod) நடாத்தி யது. இதன் பொழுது, உலக ஆயர்களின் கருத்துப் பரிமாற்றங்களை ஊடகவியலாளராக அவதானிக்கும் பாக்கியம் பெற்றேன்.

### அத்தியாயம் 8

**தமிழ் வழிபாடுகளில் பண்பாட்டு மயமாக்குதலை ஆர்வத்துடன் நடத்தினால் மட்டும் போதாது.**

**8.1 வத்திக்கானின் சந்தேகமும் பண்பாட்டு மயமாக்குதலுக்கு 3 வருட அனுபவ அனுமதியும்**

ஆரம்பத்தில் சங்கம் ஐரோப்பியர் அல்லாத கிறிஸ்தவர்களின் இனப் பண்பாட்டு வேற்றுமைகளைப் புரிந்து செய்த மாற்றங்களையிட்டு மகிழ்ச்சியுடன் வரவேற்றோம். ஆனால் பண்பாட்டு மயமாக்குதலில் அபாயமான அல்லது கிறிஸ்தவ விசுவாசக் கோட்பாடுகளுக்கு முரணானவைகளும், தமிழ்க் கிறிஸ்தவத்தினுள் கலந்து விடுமோ என்ற சந்தேகம் எம்மில் சிலருக்கும், வத்திக்கான் அதிகாரிகள் பலருக்கும் ஏற்பட்டது.

வரலாற்றிலே பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, சீனாவிற்கு மறைபரப்பாளராகச் சென்ற மத்தேயோ றிச்சி (Mateo Ricci) என்ற இயேசு சபைக் குரு, சீனத்திய சூழலுக்கொப்ப சில மாற்றங்களை செய்ய முயன்றார். ஆனால் அம்முயற்சிகள் உரோமைத் தலைமை பீடத்தினால் ஆபத்தானவை எனத் தடை செய்யப்பட்டன. ஆகையினால் இம்முறை உரோமைத் தலைமைத்துவம், இந்த மாற்றங்களை மிக உன்னிப்பாகக் கரிசனையுடன் கவனித்தது. தமிழ்க் கிறிஸ்தவத்தின் முயற்சிகளை சந்தேகக் கண்களுடன் பார்த்து வந்தது. மாறுபட்ட மதக்கொள்கைகள் கலந்துவிடும் (Syncretism) என்ற சந்தேகத்தின் காரணமாக தமிழ் ஆயர்களினால் பிரேரிக்கப்பட்ட மாற்றங்களை மூன்று வருடங்கள் மாத்திரம் - ஒரு அனுபவகாலம் - (experimental years) என்று சொல்லி, உத்தரவு கொடுத்தது. பின்னர் தமிழ் ஆயர்களின் பொறுப்பில் அம்மாற்றங்களை விட்டது. (தொடரும்....)

## காவலன் கலசம்



# வரலாற்றில் ஒரு தலைவர்

### யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர்
### ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.

**யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்கால)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.**

**(சென்ற இதழின் தொடர்ச்சி..)**

**2. மறை வாழ்வில் சீர்திருத்தங்கள்**

1930 இல் பிரித்தானிய அரச பாராளு மன்றத்தில் சமூக ஏற்றத் தாழ்வுகளை ஒழிப்பது தொடர்பான சட்டத்தை நிறை வேற்றும் வரையும், பாடசாலைகளில் 'வெளிப்படையாக'நிலவி வந்த சமூக ஏற்றத் தாழ்வு மற்றும் அனுமதி மறுப்புக் காரணமாகவும் பல பிள்ளைகள் கல்வி யறிவு அற்றவர்களாக உருவாகினர். சமூக வேறுபாடுகள் மட்டுமல்ல மாறாக 2ஆம் வத்திக்கான் சங்கத்திற்கு முற்பட்ட அறிவுமைய மறைக்கல்வி, பொதுநிலை யினரிலும் பார்க்கத் திருநிலையினர் முக்கியப்படுத்தப்பட்டமை, திருவிவிலி யம் பயன்படுத்த முடியாதிருந்தமை போன்ற விடயங்களினால் மறையறி வில் ஆழமின்மையும் அறியாமையும் நேர்விதியான நம்பிக்கைக் கையளிப் பின்மையும் உருவாகின. இறைமறுப்புக் கொள்கை, பொதுவுடமைக் கொள்கை பரவவும், தெய்வ பயமற்ற சூழல் உரு வாகவும் பெரியோரை மதிக்காத நிலை ஏற்படவும் வழிவகுத்தது.

மறை வாழ்வில் அறியாமை "எமக்குக் கீழே வேலை செய்பவர்கள் எவ்விதம் எமது ஆலயங்களில் எமக்குச் சரிநிகராக அமர்ந்து திருவழிபாடுகளில் பங்குபற்ற முடியும்?"என்னும் சமூக வேறுபாட்டில் ஊறிய கிறிஸ்தவத்திற்கு எதிரான, சாட்சிய மனநிலைகளை உயர் சமூகத்தினர் கொண்டிருந்தனர். அக் காலத்தில் பிற சமயத்தவர்கள் மத்தியில் அவர்களது கோவில் சுற்றாடல்களிலும், சமூகக் கொண்டாட்டங்களிலும் சமூகப் பிரிவினைக் கடுங்கோட்பாட்டு மனப் பான்மை பகிரங்கமாகக் கடைப்பிடிக்கப் பட்டது. ஆனால் இவற்றிலிருந்து விடு தலை பெற முடியுமென்று வெளியிலே சமத்துவம் பேசிய கத்தோலிக்க மதத்தினர் மத்தியில் ஆலயங்களுக்குள்ளேயே, (இப்போதுகூட சாத்தான் குந்தியிருப்பது ஆலயத்திற்குள்ளேதான்.) அம்மனப் பான்மை பிழையின்றிச் சரிவரக் கடைப் பிடிக்கப்பட்டது. இதனால் பல ஆலயங் களும் உரிமை மறுப்புகள் ஏற்பட்டன. மேற்கூறப்பட்ட மனப்பான்மையால் உயர் சமூகத்தினர் என்று தம்மை அடை யாளம் காட்டியோரை, தாழ்த்தப்பட்ட சமூ கத்தினர் நேரடியாகப் பழிவாங்க முடியாத காரணத்தினால் பிரிந்து போவதே நல் லது என எண்ணினர். திருஅவையும் அதிகாரவர்க்கத்தையே சார்ந்து உயர் சமூகத்தின் பக்கம் நிற்கின்றது என எண் ணித் திருஅவையின் சட்டதிட்டங்களை யும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் சரிவரக் கடைப்பிடிக்காது அலட்சியமாகப் பின்வாங்கினர்.

சமூக வேறுபாட்டில் ஆலயங்கள் ஆங்கிலேயர் காலத்தில் ஐரோப்பிய மறையறிவிப்பாளர்கள் உயர் சமூகக் கிறிஸ்தவர்களின் பிடிவாதம் காரணமாக முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்குச் சமூகத் திற்கொரு ஆலயம் (பாரிய தீமையைத் தடுக்கச் சிறிய தீமையைச் சகித்தல்) என் னும் கொள்கைக்கு இணங்கிப்போக வேண்டியதாயிற்று. இவரது காலத்திற்கு முன்பே அருகருகாக ஓரிரு கிலோமீற்ற ருக்குள், உயர் சமூகத்தின் நிர்ப்பந்தம் காரணமாக தாழ்த்தப்பட்டோருக்கு ஆல யங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டன. நல்லூர் சுவாமி ஞானப்பிகாசரின் 25 வருட முன்னேற்றம் இவ்வாறு பல ஆலயங்கள் எழுந்தமை பற்றிக் கூறுகின்றதுஆனால் ஆயர் எமிலியானுஸ்பிள்ளை இம்மனப் பான்மை தனது ஆளுகையின் கீழ் தொடர்ந்தும் வளர விடாமல் பொது ஆல யக் கொள்கையை விடாப்பிடியாக வலி யுறுத்திச் சமூக வேறுபாட்டில் வேறு ஆலயங்கள் உருவாகாமல் தடுத்தார். ஆயினும் தமது சொந்தக் கிராமமாகிய கரம்பொன் கிராமத்தின் புனித செபஸ்தி யார் ஆலயத்திற்கு ஏற்கெனவே சேர்ந்து அவ்வாலயத்தைக் கட்டியெழுப்பவும் தொடர்ந்து பராமரிக்கவும் தமது தாரா ளமான பங்களிப்பைத் தொடர்ந்து வழங்கி யிருந்த மக்கள், 1950இல் (ஏற்கெனவே கடற்றொழில் செய்யச் சென்று வந்த) மெலிஞ்சிமுனையில் குடியேற்றப்பட்ட வேளை 1951இல் இருந்து அங்கேயே ஒரு செபக்கூடத்தில் திருப்பலி நிறை வேற்றவும் 1960இல் கரம்பொன் பங்கு அருட்பணியாளர் எஸ்.பீற்றர் அ.ம.தி. யால் ஆலயமொன்று இவர்களுக்கென அமைக்கவும் இவர் அனுமதி வழங்கி யமை இவரது காலத்தில் இறைவாக் கினர்கள் தமது சொந்த இடங்களில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்னும் வகையில் நிகழ்ந்ததோர் துன்பியல் எதிர்ச்சாட்சியமாகும்.

ஆலயப் பதிவேடுகளில் புறக்கணிப்பு இரண்டு சமூகப்பிரிவினர் ஒன்றாக இருந்த ஆலயங்களில் தாழ்த் தப்பட்ட சமூகத்தினரின் பெயர்கள் பதிவேடு களில் பேணப்பட்ட வேளை அவர்களின் சமூகப் பெயர்களையும் குறிப்பிடுவது வழமையாக இருந்தது. ஐரோப்பிய திருப் பணியாளர்கள் தமது மொழியில் (அல் லது உபதேசி மார்களின் துணையுடன் தமிழில்) மேற்கொண்ட பதிவேடுகளில் இன்று வரை இதனைக்காணலாம். மக்களின் வாழ்விடங்களையும் பரம் பரை வழிமரபையும் தெரிந்து கொண்டு பணியாற்றும் நல்ல நோக்கத் துடன் ஐரோப்பிய மறைப்பணியாளர் கள் இவ்வாறு பதிவு செய்திருப்

**அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா**

பர் என்று கருதினாலும், ஆலயவழிபாடு களில்சமூகக் கடுங்கோட்பாட்டு மனப் பான்மையைக் கடைப்பிடித்த உயர் சமூகத்தினரின் தூண்டுதல் இருந்ததை மறுக்கமுடியாது.

ஏனெனில் ஏனைய சமூகத்தின ருக்குத் தமது ஆலயங்களில் உரிமை யில்லையென்று வாதாடிய உயர் சமூ கத்தினர் நிச்சயமாக ஏனையோரை ஆலயப்பதிவேடுகளிலும் பதிவு செய்ய மறுத்திருப்பர். ஐரோப்பிய மறைபணி யாளர்கள் ஏனையோரையும் பதிவு செய்ய வேண்டுமென வற்புறுத்திய வேளைகளில், உயர் சமூகத்தினர் தம்மை வேறுபடுத்திக் காட்ட, இரண்டு பகுதியினரின் சமூகப் பெயர்களையும் வேறுபடுத்திப் பதிவு செய்யவைத்துப் பெருமைப்பட்டிருப்பர் என்று கருதவும் இடமுண்டு. மேலும் அக்காலகட்டத்தில் மிகவும் கடுமையாக இருந்த கடுங் கோட்பாட்டு சமூகத்துவேஷத்தால், தமக்கு இருந்த பல்வேறு பங்குப்பிரச்ச னைகள் மத்தியில் ஐரோப்பிய மறைப் பணியாளர்கள் சமூக ஏற்றத்தாழ்வுகளை இல்லாமல் செய்ய முயன்றிருப்பார்களே ஒழிய இவ்வாறு ஏடுகளில் பதிவு செய்து அதை வளர்க்க முயன்றிருக்க மாட்டார்கள். (தொடரும்...)




(சென்றவாரத் தொடர்ச்சி)

**ஆயர் செமேரியாவின் ஆயர்த்துவப் பணிகள் - ஒருமீளாய்வு**

**13. அக்கரைப்பற்று மறைத்தளம் - 1866**

**14. புத்தளம் மறைத்தளம் - 1866**
தேற்றாப்பளை 1866

**15.சிலாபம் மறைத்தளம்**
மகா ஞானொடுக்கம்
1860 செப்ரெம்பர்-நவம்பர்

**16.வென்னப்புவ, கட்டுனேரிய மறைத்தளம்** 1864,
பின்னர் 1866

**17. போளவத்தைமறைத்தளம்**
மகாஞானொடுக்கம் - 1860
டிசெம்பரிலிருந்து பெப்ரெவரி 1861வரை

**18. குருணாகலை மறைத்தளம் - 1866**
(தமது திருத்தூது மாவட்டத்தில் மேய்ப்புப்பணித் தரிசிப்புக்களின் போது ஆயர் செமேரியா 10,250 பேருக்கு உறுதிப்பூசுதல் அருளடையாளத்தை வழங்கியுள்ளார்.)

இவர் ஆயராக இருந்த 10 வரு டங்களில் வடக்குத்திருத்தூது மாவட்டத் தில் 7 புதியஆலயங்களையும் மற்றும் பல சிற்றாலயங்களையும் பல இடங் களில் குருக்கள் தங்குவதற்கான அறை வீடுகளையும் கட்டினார். திருத்தூது மாவட்டத்தில் கத்தோலிக்கரது எண் ணிக்கை 8-10 ஆயிரங்களால் அதிகரித்தது. வருடாந்த ஒப்புரவு அருளடையாளம் 50 ஆயிரத்தைக் கடந்து பாஸ்காக் காலத்தில் திவ்விய நற்கருணை உட்கொள்வது 30 ஆயிரத்தைக் கடந்தது. திவ்விய நற்கருணை மீது கொண்ட அன்பினாலும்,பக்தியினாலும் வாராந்த நற்கருணை ஆராதனை, நற்கருணைச் சந்திப்பு, திருமணித்தியாலயம், நற்கருணைப்பவனி ஆகியவற்றை ஊக்குவித்துப் பிரபல்யப்படுத்தினார், கன்னிமரியா மீது கொண்ட விசேட வணக்க உணர்வால் வைகாசி மாத வணக்க மாத பக்தி முயற்சிகள் மற்றும் கன்னிமரியா பெயரில் உள்ள பக்தி முயற்சிகளையும் ஊக்குவித்தார். 1857ல் ஆயரான பின்பும் செமேரியா ஆண்டகை ஒரு தாழ்ச்சியுள்ள அமலம-ரித் தியாகியாக முன்னர் குருவாக இருந்தபோது கடைப்பிடித்து வந்த எளிமையான வாழ்க்கை முறையை மாற்றவில்லை. ஒரு குழுமத்தில் சற்று ஒதுங்கியவராக இருந்தாலும் எப்போதும் நட்புறவுடன் அணுகக் கூடியவராகவும் என்ன விடயத்திலும் மட்டுமிதத்துடனும் நடந்து கொண்டார். இருக்கும் குழுமத்தில் உள்ளமற்ற அமலம-ரித் தியாகிகளுடன் எல்லா ஆன்மீகப் பயிற்சிகளிலும் கலந்துகொள்பவராகவும், மாதாந்த, வருடாந்த, குழுமத் தியானங்களில் போதிப்பவராகவோ, பங்கெடுப்பவராகவோ கலந்து கொண்டும் வந்தார். அமலமரித் தியாகிகளின் தனித்துவமான பாரம்பரியங்களைப் பின்பற்றுவதில் மற்ற அமலமரித் தியாகிகளுக்கு எப்போதும் ஒரு முன்னுதாரணமாகவே வாழ்ந்தார். திருத்தூது மாவட்டத்தில் பணியாற்றிவந்த எல்லா மறைப்பணியாளர்களையும் அவரவர் மறைத்தளங்களில் தரிசிப்புதுடன் நின்றுவிடாது சில

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

நாட்கள் ஒவ்வொருவருடனும் தங்கி அவர்களது பணிகளிலும் உதவி உற்சாகப்படுத்தியும் வந்தார். ஒரு அன்பான தந்தைக்குரிய அன்புடன் அவர்களது உடல் உளநலன்களில் அக்கறையுள்ளவராகவும் செயற்பட்டு வந்தார். (தொடரும்...)

## அன்பே அனைத்திற்கும் ஆணிவேர்

துன்பங்களை அனுபவித்த காலத்தை மறந்துவிடலாம். ஆனால் அது நமக்குக் கற்றுக் கொடுத்த பாடத்தை மறந்துவிடக்கூடாது. கற்றுக்கொண்ட பாடத்தினால் வாழ்க்கைப் பாதையை மாற்றி பண்பட்டவர்கள்கள் பலர். சாதாரண நிலையில் அசாதாரண செயல்களைச் செய்தவர்கள் சிலர். கலிங்க நாட்டின் மீது போர்தொடுத்த அசோக மன்னன் போர்க் களத்தில் நடந்த கோரக் காட்சிகளைக் கண்டு கண்ணீர் விட்டு அழுதார். "இன் நாடுகளை அன்பினால் வெல்வேல், அன்பினால் மக்களை ஆள்வேன்" என்று உறுதி கொண்டார். **"உன்டைய எதிரிக்கும் உதவி செய், உனக்குத் தீங்கு நினைப்பவர்க்கும் நன்மை செய்"** என்று இயேசு கூறுகிறார். அன்பைப் போதிக்கவே ஞானிகளும், இறைவாக்கினர்களும் இவ்வுலகில் தோன்றினர். அன்பு நிலையானது! உலகை ஆள வல்லது.

தற்காலத்தில் வாழும் நாம் பிறரோடு அன்பாக இருப்போம். யுத்தம் இன்றி, நாடுகளை அன்பினால் வெல்வோம், அன்பினால் மக்களை ஆள்வோம் .

# காவலன் கலசம்

# என் கேள்விக்கென்ன பதில்!




கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!

அருட்பணி செ. அன்புராசா

(சாந்தன், யாழ்ப்பாணம்)

**கேள்வி: எம்முடைய ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளும் சில்லறைப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசிக் கொள்வதில் காலத்தைக் கடத்தி, அடிப்படைப் பிரச்சினைகளை அடியோடு மறந்து விடுவதற்கான காரணம் என்ன?**

**ப:** சாந்தன், உங்கள் கேள்விக்கு அண்மையில் நான் படித்த ஒரு கோட்பாட்டால் விடை பகரலாம் என நினைக்கின்றேன்! அதன் பெயர் 'பன்றிமயக் கோட்பாடு'! அது எப்படியென்றால், அநியாயப்பட்ட ஓர் அரசன் ஓர் அப்பாவிக் குடிமகனை அநியாயமாகக் கைது செய்து மூன்று மீற்றர் பரப்பளவான ஒரு தனிச்சிறையில் அடைக்கின்றான். இக்குடிமகனோ தான் நிரபராதி என்றும் தன்னை ஏன் கைது செய்தார்கள் எனவும் கேள்வியெழுப்பி, ஆர்ப்பாட்டம் செய்கின்றான். அதனால் கோபம் கொண்ட சிறைக்கூடக் காவலன், ஒரு மீற்றர் பரப்பளவான தனிச்சிறையில் அவனை வைக்கின்றான். அக்கைதியோ, தான் நிரபராதி என்ற வாதத்தை விட்டு விட்டு, 'இச்சிறிய இடத்தில் நான் எப்படி உண்பது உறங்குவது!' எனக் கதறுகின்றான். காவலனோ, ஒரு மீற்றர் சுற்றளவைக் கொண்ட அச்சிறைக்கூடத்தில் இன்னும்நான்குபேரைஅடைக்கின்றான். அந்த ஐந்து கைதிகளும், தாங்கள் மூச்சுத் திணறி இறந்துவிடலாம் என்றும் இந்தளவிற்கு ஈவிரக்கமே இல்லாதவனா அரசன் எனவும் புலம்புகின்றார்கள். இதனால் கடும் கோபம்கொண்ட காவலன், ஒரு பன்றியை அவர்களோடு சேர்த்து அடைத்து விடுகின்றான்! அக்கைதிகள் விரக்தியுற்ற நிலையில், 'இந்த அசிங்கத்துடன் இச்சிறிய சிறைக்கூட்டில் நாங்கள் எப்படியிருப்பது? கருணைகூர்ந்து, இப்பன்றியையாவது இங்கிருந்து அகற்றிவிடுங்கள்!' என்று அரசனிடத்தில் விண்ணப்பம் செய்கின்றார்கள். பன்றி அங்கிருந்து அகற்றப்படுகின்றது. மறுநாள், அரசன் அப்பக்கம் வந்து கைதிகளைச் சந்தித்து, அவர்களின் நலம் விசாரிக்கின்றான். அவர்கள், தாங்கள் நலமாக இருப்பதாகவும் தங்களின் பெரிய பிரச்சினை தீர்ந்துவிட்டதாகவும் அப்பிரச்சினையைத் தீர்த்து வைத்தமைக்காக அரசனுக்கு நன்றியும் தெரிவித்தார்கள்! இதுதான் பன்றிமயக் கோட்பாடு! இவ்வாறுதான், எமது நாட்டின் அரசியல் தலைவர்களும் மக்கள் பிரதிநிதிகளும் பொதுவாகச் செயற்படுகின்றார்கள்! சின்னச்சின்ன சில்லறைப் பிரச்சினைகளை மேலும் சிக்கலான பிரச்சினைகளாக உருவாக்கி அல்லது உருமாற்றி, அவற்றிலிருந்து விடுபட பன்றிமயக் கோட்பாட்டை அமுல்படுத்தி, அடிப்படைப் பிரச்சினைகளை அடியோடு மறக்கச்செய்து விடுகின்றார்கள். மக்களும் தங்கள் சின்னச் சின்ன பிரச்சினைகளில் இருந்து விடுபட்ட சந்தோசத்தில் அடிப்படைப் பிரச்சினைகளை மறந்துபோய் விடுகின்றார்கள் அல்லது அவற்றோடு வாழப்பழகிக் கொள்கின்றார்கள்!

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கே: கனேடிய நாடாளுமன்றத்தில் ஈழத்தமிழர்களின் இன அழிப்பு நாளாக மே 18ம் நாளை அங்கீகரித்திருக்கின்றார்கள். இதுபற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

**ப:** ஆனந்தன், சர்வதேசத்தினுடைய பார்வை ஈழத் தமிழர்பால் திரும்பியிருப்பதைக் கவனிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஒரு பொய்யை ஒருவர் எத்தனை நாட்கள்தான் சொல்லிக்கொண்டிருக்க முடியும்! தமிழர்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட கொடூரங்களை, இன அழிப்பை சர்வதேசம் படிப்படியாகப் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்ள முன்வருகின்றது என்பது இதிலிருந்து தெளிவாகின்றது! ஆக, தமிழர்கள் ஒத்த, ஒருமித்த குரலில் இதுபற்றித் தொடர்ந்து குரல்கொடுத்துச் செயற்பட்டால் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதியை விரைந்து பெறமுடியும்!

*(அருள், யாழ்ப்பாணம்)*

**கே: இத்தனை எதிர்ப்பார்ப்பாட்டங்கள் செய்தும் அரசும் அரசத் தலைவர்களும் அசைவதாய்த் தெரியவில்லையே! இதுபற்றி என்ன கருதுகின்றீர்கள்?**

**ப:** அருள், இரத்தம் குடித்து வளர்ந்த மூட்டையை அழிக்கக் கிருமிநாசினி தெளிக்கின்றீர்கள் என்று வைத்துக் கொள்வோம்! அம்மூட்டைகள் கதிரையை, கட்டிலைவிட்டுப் போகுமோ!? இல்லைத் தானே! அதுபோலத்தான் சில மனித மூட்டைகள்! இரத்தம் உறிஞ்சிப் பழக்கப்பட்டு விட்டன. அவற்றை அகற்றுவதும் அழிப்பதும் மிகக் கடினமானது!

*(மேரி, யாழ்ப்பாணம்)*

**கே: ஆரியசிங்கவுக்கு அன்புராசா எழுதும் கடிதம் என்ற மிக சுவாரசியமான கடிதத் தொடரினை மிக அருமையாக முகநூலில் எழுதி வருகின்றீர்கள். அதனை எழுதுவதற்கான நோக்கம் என்ன? அதனை சிங்கள மொழியில் மொழிபெயர்ப்புச் செய்வது அவசியமானது எனப் பலரும் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்கள். எனது கருத்தும் அதுவே! அது கட்டாயமாக ஆகக்குறைந்தது சிங்களத்தில் வரவேண்டும். இது பற்றி தங்களின் கருத்துக்கள் என்ன? பாதுகாவலன் வாசகர்களின் நன்மை கருதி அக்கடிதத் தொடரின் முதலாவதைத் தருவீர்களா?**

**ப:** நிச்சயமாகத் தருவேன் மேரி. உண்மையில் கடந்த காலப் போர்க்கால அனுபவங்களை எழுதவேண்டும் என மிகநீண்ட காலமாக எண்ணியிருந்தேன். அதற்கான ஒரு சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தேன். இப்போதுதான் அதனை எழுதக் காலமும் வாய்ப்பும் அமைந்திருக்கின்றது. எங்கள் அனுவபங்களைப் பகிர்ந்து கொள்வதால் உறவுகளுக்கிடையில், மனிதர்களுக்கிடையில், மதங்களுக்கிடையில், இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தி புரிதலை வளர்க்கலாம் என நம்புகின்றேன். அதனால், இவற்றை சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் சந்தர்ப்பங்கள் வாய்த்தால் ஏனைய சில மொழிகளிலும் மொழிபெயர்க்கலாம் ... *(தொடர்ச்சி 11ம் பக்.)*

# யாழ் மறைமாவட்டத்தில் 170 ஆண்டுகள் பழமை வாய்ந்த பத்தாவத்தை புனித பிலிப்புநேரியார் ஆலயம் புதுப்பொலிவுடன்



ஜெயமரினோ

இளவாலை மறைக்கோட்டத்தில் உள்ள தொன்மை வாய்ந்த பத்தாவத்தை புனித பிலிப்பு நேரியார் ஆலயம் புதுப்பொலிவுடன் முழுமையாகப் புனரமைப்பு செய்யப்பட்டுக் கடந்த 25ம் திகதி புதன்கிழமை யாழ் மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் ஆசீர்வதித்துத் திறந்து வைக்கப்பட்டது. பழமையான ஆலயத்தை அழகுறப் புனரமைத்த அருட்தந்தையர்கள் பங்கு மக்களைப் பாராட்டி இறைவனுக்கு நன்றி கூறி ஆயர் நற்கருணைப் பெருவிழாத் திருப்பலியை ஒப்புக் கொடுத்தார்.

மறுநாள் 26. 05 2022 வியாழக்கிழமை திருவிழாத் திருப்பலியை யாழ் மறை மாவட்ட குருமுதல்வர் ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அவர் தனது மறையுரையில் உரோமாபுரியின் 2வது அப்போஸ்தலர் என அழைக்கப்படும் புனித பிலிப்பு நேரியார் அங்கு இருண்டு. பாழடைந்து காணப்பட்ட மக்களின் விசுவாச வாழ்வைப் புணருத்தானம் செய்ததை எடுத்துக்கூறி. ஆலய புணருத்தானம் இரண்டு நிலைகளில் இடம்பெறுதலின் அவசியத்தை வலியுறுத்தினார். மேலும் இந்த ஆலயத்தின் புணருத்தானம் ஒரு இலகுவான காரியமல்ல. எத்தனையோ பிரச்சினைகள் தடைகள் நெருக்கீடுகள் மத்தியில் இடம்பெற்றன. ஒருவேளை இடைநடுவில் கைவிட்டுவிடுவோமோ என்ற சிந்தனைகள். பல சவால்கள். இடையூறுகளைக் கடந்து தான் இந்த ஆலயம் அழகாகக் காட்சியளிக்கிறது என்பது இந்த ஆலயப் புனரமைப்பு பணியில் ஈடுபட்டவர்களுக்கு நன்றாகத் தெரியும். தூய ஆவியானவர் குடிகொள்ளும் உயிருள்ள ஆலயமான எமது இதயங்களைப் புணருத்தானம் செய்கின்றபோது பல சவால்கள் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அவ்வாறு செய்வது ஒருவேளை கடினமாக தோன்றினாலும் மிகவும் ஸ்திரமாக புனரமைப்பு செய்யப்பட்ட எமது ஆலயம் புனித பிலிப்பு நேரியாரின் துணையோடு புணருத்தானம் செய்யலாம் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. அதேபோல் எமது இதயங்களையும் சவால்களைக் கடந்து புணருத்தானம் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

1700ம் ஆண்டு காலப்பகுதியில் சந்திர மாப்பனாரின் பேரனான பாவிலுப்பிள்ளை எனும் பக்தியுள்ள கிறிஸ்தவனால் மண்ணினால் கட்டப்பட்ட ஆலயம் இருந்த இடத்தில் 1852ம் ஆண்டு அருட்தந்தை எர்மியோ குய்டீ அடிகளாரால் இவ்வாலயம் கல்லினால் கட்டப்பட்டது. தொடர்ந்து வந்த அருட்தந்தையர்களால் பல்வேறு காலப்பகுதியில் கட்டிடப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு நிறைவு பெற்றன.

1992ம் ஆண்டு நாட்டுச் சூழ்நிலை காரணமாக பங்கு மக்கள் தம் சொந்த இடத்தையும் பாதுகாவலரின் ஆலயத்தையும் விட்டு வெளியேறி இலங்கைத்தீவின் பலபகுதிகளில் குடியேறியதோடு மட்டுமல்லாது புலம்பெயர் நாடுகளிலும் தஞ்சமடைந்தனர். அவ்வாறு கனடா தேசத்தில் குடியேறியவர்கள் இன்றும் பாதுகாவலராம் புனித பிலிப்பு நேரியார் விழாவை அங்கு கொண்டாடி வருவது தமது விசுவாச வாழ்வுக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்றது. மீளவும் 1996ம் ஆண்டு தமது சொந்த இடத்தில் மீளக்குடியமர்ந்தவர்கள் போரினால் சிதைவடைந்து காணப்பட்ட எமது ஆலயத்தை பங்குத்தந்தையர்களின் வழிநடத்தலில் காலத்துக்கு காலம் பகுதியளவில் புனரமைப்பு செய்தார்கள். ஆனாலும் புனரமைப்பு பணிகளிலே பல தடைகளும் இடையூறுகளும் ஏற்பட்டதன் விளைவாக இவ்வாலயத்தில் திருப்பலிகளோ வழிபாடுகளோ நிறைவேற்ற முடியாத துர்ப்பாக்கிய நிலை சில ஆண்டுகளாக காணப்பட்டன. பங்குதந்தை டினேஸ் அடிகளாரின் காலப்பகுதியில் யாழ் மறைமாவட்ட ஆயரின் அனுமதியுடன் 2019.10.05 அன்று யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் ப. யோ.ஜெபரட்ணம் அடிகளார் இவ் வாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்து புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்து வைத்தார். எம் பங்கின் மைந்தன் அருட்தந்தை எ. எட்வின்நாதன் அடிகளாரின் மேற்பார்வையில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வதியும் பங்குமக்களின் முழுமையான நிதிப்பங்களிப்புடன் பலதடைகள். சவால்கள். தொல்பொருள் திணைக்களத்தின் இடையூறுகள் மத்தியில் பல பொறியியலாளர்களினதும் தொழில்நுட்பவியலாளர்களினதும் ஆலோசனைகளுடன்170 ஆண்டுகள் பழமையான எமது பாதுகாவலரின் ஆலயம் மிகவும் அழகாக. ஸ்திரமாக புனரமைப்பு செய்யப்பட்டு பங்குத்தந்தை ஜெயக்குமார் அடிகளாரின் காலப்பகுதியில் திறந்து வைக்கப்பட்டது. எமது விசுவாச வாழ்வுப் பயணத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

**வலுவூட்டும்.** (4ம் பக்கத் தொடர்ச்சி)

மேலெழுந்து செயற்பட அனுமதிப்பதன் மூலம் நம்மைத் தகுதிப்படுத்த வேண்டும். அப்போது தூய ஆவியின் நிரப்புதலையும் வல்லமையையும் நாம் உணரமுடியும்.

"தூய ஆவி உம்மீது வரும், உன்னத கடவுளின் வல்லமை உம்மீது நிழலிடும்" (லூக். 1:35) ஆம், தூய ஆவிவரும் போது வல்லமையும் சேர்ந்தேவரும். இன்று நம்மில் பலா் துன்பங்களைத் தாங்கும் பல மற்றவா்களாய் விரக்தியிலும், குடிவெறி, போதை, தற்கொலை முயற்சிகளில் சிக்கிச் சீரழிவதை நாம் காண்கிறோம். நாடு மற்றும்சமூகத்தில்வறுமை தொடர்துன்பத்தை அனுபவிக்கிறோம். காரணம் ஆன்ம சரீர பெலவீனங்களே. இவ்வாறான வேளைகளில் தூய ஆவியாரின் பிரசன்னமும் செயலூட்டமும் நமக்கு மன உறுதியும் வலுவூட்டலும் தரும். இந்த நிலையின் உண்மைத் தன்மையை வேதத்தில் ஒரு சம்பவத்தின் மூலம் தெளிவாக உணரமுடியும். இயேசுவின் பாடுகள் மரணத்தின் பின் திருத்தூதர்கள் தமக்கும் அவ்வாறு நேருமென அஞ்சி, ஆத்ம பலம் இழந்து, ஆவியில் குன்றி, உடலைக் காக்க எண்ணி, மேல்மாடி அறையில் ஒழித்திருக்கின்றனா். அவா்களது நிலை அஞ்சிய ஒரு தலைமறைவு வாழ்வாக அமைந்திருந்தது. ஆனால் உயிர்த்த இயேசு அவா்களிடையே தோன்றி அவர்களை ஆவியால் நிரம்பி, ஆன்ம சரீர நலம் பெற்று எழுகிறாா்கள். பேதுரு ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவராய், யாருக்காக ஒழித்திருந்தாா்களோ, அவா்கள் முன் துணிந்து எழுந்து தனது முதலாவது திருச்சங்க உரையை ஆற்றுவதையும் பலர் உள்ளம் குத்துண்டவா்களாய் மனம்மாறுவதையும் திருத்தூதா் பணியில் படிக்கிறோம். எனவே, தூய ஆவியாரின் உடனிருப்பு ஆத்மாவையும் சரீரத்தையும் புதுப்பித்து, வலுவூட்டும் மூவொரு கடவுளின் மூன்றாம் ஆளாகிய ஆவியாரின் பிரசன்னத்தை நம்பிக்கையோடு உள்ளத்தில் இருத்தி இறை கரம் பற்றி நடப்போமாக.

# 1ம் வருட நினைவஞ்சலி

தோற்றம்
08 . 05 . 1957



மறைவு
09 . 06 . 2021

அமரர்

## இவாஞ்சலின் எழில் வானம்பாடி சாள்ஸ்

(இளைப்பாறிய ஆசிரியை)

"ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை அருமையானது - (திபா 84:1)

**கருணையின் தேவனே இறைவா!**

இவ்வுலகில் உமக்கு சாட்சியாக வாழ்ந்து உமது திருவுளப்படி உம் சந்நிதானம் வந்திருக்கும் இவாஞ்சலின் எழில் வானம்பாடி சாள்ஸ் என்பவரின் ஆன்மாவை உமது கரங்களில் ஒப்படைக்கின்றோம். இவருக்கு நீர் கொடுத்த வாழ்வு எனும் கொடைக்காக உமக்கு நன்றியோடு புகழ்பாடுகின்றோம். இவர் இவ்வுலகில் வாழ்ந்தபோது மனித பெலவீனத்தால் செய்து கொண்ட பாவங்களையும் குறைகளையும் மன்னித்து நிலைவாழ்வையும் புனிதர்களின் தோழமையுள்ள உறவையும் கொடுத்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம் ஆமென்

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 09.06.2022 வியாழக்கிழமையன்று காலை 5.30 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்திலும், காலை 6.00 மணிக்கு அருள் ஆச்சிரமத்திலும் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும்.

*96, பழைய பூங்கா வீதி,*
*யாழ்ப்பாணம்.*

AD/ 48

*கணவர், உறவுகள்*

# என் கேள்விக்கென்ன பதில்?

(6ம் பக்கத் தொடர்ச்சி)

என எண்ணியிருக்கின்றேன். உண்மையில் அக்கடிதத் தொடர் இன்னும் நிறைவுக்கு வரவில்லை. அது தொடர்ந்து வரும் என நம்புகின்றேன். கோல்பேசில் தன்னெழுச்சிப் போராட்டமாக முன்னெடுத்துவரும் இளையோர்களுடன் நாங்கள் பட்ட போர்க்கால அனுபவங்களைப் பகிர்வதுதான் இக்கடிதங்களினுடைய நோக்கமாக இருக்கின்றது. அவ்வகையில் ஆரியசிங்க என்ற ஒரு நண்பன் ஊடாகத் தென்பகுதி நண்பர்களோடு பகிரும் ஒரு பகிர்தலே இக்கடிதங்கள்! அது, இவ்வாறு தொடங்கிச் செல்கின்றது: 'அன்பின் நண்பா ஆரியசிங்க, உன் அன்பு நண்பன் அன்புராசா எழுதுவது! எப்படிச் சுகமாக இருக்கின்றீர்களா? நாடே இருளிலும் பசி பட்டினியிலும் இருக்கும் போது நலமாய் இருக்கின்றீர்களா என்று கேட்பதற்குக் கொஞ்சம் கஸ்ரமாக இருக்கின்றது! இத்துன்பப் படலம் விரைவாய்க் கடந்துபோக இறைவன் துணைசெய்வாராக!

நிற்க, ஆரியசிங்க, நீங்கள் கோல்பேசில் இன்றும் நிற்பதாக அறிந்தேன்! புனித நாளான உங்கள் புத்தாண்டின் முதல்நாளில் இப்படியொரு நிலைமையை யாரும் கனவிலும் காணவில்லை! அங்கு, நிலைமைகள் எப்படி இருக்கின்றது? ஆரியசிங்க, என் உள்ளத்தில் எழுந்த சில எண்ணங்களை இத்தருணத்தில் உங்களோடு பகிர்வது எவ்வளவு பொருத்தமோ தெரியவில்லை! இருப்பினும் அதனை உங்களிடத்தில் சொல்லிவிடுவது நல்லதுபோல் எனக்குப் படுகின்றது! அதனால் எழுதுகின்றேன்.

சில தசாப்தங்களை இந்நேரத்தில் எண்ணிப் பார்க்கின்றேன்! நாங்கள் எங்கள் சொந்த வீடுகளிலிருந்தும் கிராமங்களிலிருந்தும் ஆண்டுக் கணக்கில் துரத்தப்பட்டு பல தடவைகள் இடம்பெயர்ந்து அழுதழுது அலைந்து திரிந்தோம்: அப்போது எங்கள் அழுகை உங்களுக்குக் கேட்கவும் இல்லை, ஏன் இந்நிலையென்று பின்னர் நீங்கள் கேட்கவும் இல்லை! எங்கள் குழந்தை குட்டிகளோடு பல ஆண்டுகளாக உணவின்றிப் பசியுற்றுப் பட்டினி கிடந்தோம்: நீங்கள் பார்க்கவும் இல்லை, பரிதாபப்படவும் இல்லை! குண்டுவீச்சிலும் எறிகணை வீச்சிலும் குற்றுயிராய் ஆக்கப்பட்டு, எங்கள் சகோதரிகள் கற்பழிக்கப்பட்டு, எங்கள் சகோதரர்கள் சித்திரவதை செய்யப்பட்டுத் துன்புறுத்தப்பட்டார்கள்: நீங்கள் எங்களைக் காணவும் இல்லை, கண்டுகொள்ளவும் இல்லை! நாங்கள் கடத்தப்பட்டுச் சுடப்பட்டு வீதிகளில் வீசப்பட்டோம்: நீங்கள் அருகில்வரவும் இல்லை, அனுதாபப்படவும் இல்லை! எங்கள் விளைநிலங்கள் அபகரிக்கப்பட்டு இராணுவ விடுதிகள் அமைக்கப்பட்டன: நீங்கள் அதனைப்பற்றி அக்கறை காட்டவுமில்லை, அலட்டிக்கொள்ளவும் இல்லை! நாங்கள் காணாமலாக்கப்பட்டுப் புதைக்கப்பட்டோம், அப்போதுகூட உங்கள் கவனம் எங்களில் படவே இல்லை!

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இழைக்கப்பட்ட, இழைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அநீதிகளுக்காகவும் அட்டூழியங்களுக்காகவும் நீதிகேட்டு வீதியில் ஆயிரம் தடவைகள் நின்றிருப்போம்! எங்களின் மீது பிரயோகிக்கப்படும் அடாவடித்தனங்கள் பற்றியும் அத்துமீறல்கள் பற்றியும் உங்களின் எண்ணத்தில், மனத்தில், நடவடிக்கையில் எந்த மாற்றமும் என்றும் ஏற்பட்டதில்லை! இந்நிலைப்பாட்டினை இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களிலும் வெளிப்படுத்தி இருந்தீர்கள்!

இறுதியில், 2009ல் உலக நாடுகளின் சதியினால் நாங்கள் ஆயிரமாயிரம் பேர்கள் கொல்லப்பட, இன்னும் பல ஆயிரமாயிரம் பேர்கள் குற்றுயிராய் கிடக்க, எஞ்சியோர் தடுப்புமுகாம்களில் அடைக்கப்பட வீதியெங்கும் பட்டாசு கொழுத்தி, கிறிபத் கொடுத்து, விருந்துகள் அளித்து, ஆண்டுதோறும் பிரமாண்டமான வெற்றிவிழாக் கொண்டாடினீர்கள்! நாங்கள் வெட்கி நாணிக் கோணித் தலைகுனிந்து அம்மணமாய் நின்றோம், நிற்கின்றோம்!

இன்று, நீங்கள் எரிபொருளும் மின்சாரமும் இல்லையென்று அழுகின்றீர்கள்! பால்மா இல்லையென்று பதறுகின்றீர்கள்! காஸ் இல்லையென்று புலம்புகின்றீர்கள்! அத்தியாவசியப் பொருள்களின் அதீத விலையேற்றம் என்று கலங்கிப்போய் நிற்கின்றீர்கள்! இவை எதுவும் இல்லாமல்தான், முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நாங்கள் வாழ்ந்துகொண்டும் எமக்கெதிரான அடக்குமுறைகளை எதிர்த்துப் போராடியும் வந்தோம்! எங்கள் குழந்தைப் பருவம், எங்கள் சிறுபராயப் பருவம், எங்கள் இளமைப் பருவம் எல்லாமே இவ்வாறுதான் கழிந்தது! ஏனைய எங்கள் ஆயுட்காலமும் எங்கள் பிள்ளைகளின் காலமும் இவ்வாறுதான் கழிந்து கொண்டிருக்கின்றது!

ஆரியசிங்க, உங்களுக்கு எரிபொருளும் மின்சாரமும் பால்மாவும் காஸ்சும் அத்தியாவசியப் பொருட்களும் கிடைத்துவிட்டால் உங்களின் பிரச்சினை தீர்ந்துவிடும்! எங்களின் பிரச்சினைகளுக்கான, அபிலாசைகளுக்கான தீர்வு! இருப்பினும், உங்களின் இத்துயர் மிகுந்த இக்காலகட்டத்தில், நாங்கள் உங்களோடு இருக்கின்றோம், உடனிருக்கின்றோம், உங்களுக்கு உதவுவோம் என்பதை மட்டும் ஒருதடவை கூறிவைக்க விரும்புகின்றோம்! நம்நாடு மீண்டும் நலம்பெறவேண்டும் என எல்லாம் வல்ல பரம்பொருளைப் பணிவோம். மிக்க நன்றி. இப்படிக்கு, செ. அன்புராசா

*(யோசப், யாழ்ப்பாணம்)*

**கே: கூட்டொருங்கியக்க மறைமாவட்டத் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுச் செயல்வடிவம் பெறும் என நம்புகின்றீர்களா?**

**ப:** யோசப், நடைமுறைப்படுத்தினால்தானே அவை செயல்வடிவத்தில் உள்ளதா அல்லது இல்லையா எனப் பார்க்க முடியும்! பொதுவாக நடைமுறையில் பார்ப்பதென்ன யோசப் அண்ணை? நாங்களே சட்டங்களை இயற்றி நாங்களே சட்டங்களை மீறுவோம்! அதுபோல, நாங்கள்தான் தீர்மானங்களையும் எடுப்போம், நாங்கள்தான் தீர்மானங்களைக் கடைப்பிடியாது விடுவோம்! எல்லாம் நமது கைகளில் இருக்கின்றது யோசப் அண்ணை!

## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழி காட்டும் பரிசுத்த ஆவியே உமது திரு நாமம் அர்ச்சிக்கப்படுவதாக உமது அருட்கொடைகளின் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரியவரே, என் வாழ்வின் எந்தச் சந்தர்ப்பத்திலும் உற்ற துணையான உமக்கு இச் சிறிய சொத்தின் மூலம் நீர் செய்யும் யாவற்றிற்கும் நன்றி கூறுகின்றேன். என தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் நிலைத் திருப்பேன் என உறுதி கூறுகின்றேன் நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்

AD-47

- ஓர் அடியாள்

## நம்பிக்கையை இழந்த மக்கள்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இனியாவது தென்னக ஆயர்கள் முள்ளி வாய்க்காலில் என்ன நடந்தது என்பதை விரிவாகப் படித்து அங்கு நடந்த கொடூரம் மனிதத்தால் ஏற்றுக்கொள்ள முடியாது. என்ற முடிவுக்கு வந்து, அறிக்கையாக வெளியிடுவார்களா? அன்றேல் மூடிமறைத்து, உண்மையை மறுத்து (post truth) மௌனம் சாதிப்பார்களா? ஏற்கனவே ஆயர் அவையின் அண்மைக்கால நடைமுறைகளும், அறிக்கைகளும் ஆயர்களில் தமிழ் கத்தோலிக்க மக்களிடம் ஒரு நம்பிக்கையை உருவாக்கவில்லை. படிப்படியாகக் கத்தோலிக்க தமிழினம் தென்னக ஆயர்களில் நம்பிக்கையை இழந்து வருகிறார்கள். நம்பிக்கையை உருவாக்குவது ஆயர்களின், சிங்களக் குருக்களின் துறவிகளின் பாரிய கடமை. பந்து உங்கள் சதுரத்தில் உள்ளது.

The ball is in your court.

# 31ம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
16 . 06 . 1952



விண்ணில்
30 . 04 . 2022

## அமரர் யோவான் யேசுராசா

"சீவியத்தில் நேசித்தோம் மரணத்திலும் மறவோம்" (அரு. 17:4)

அப்பா!
அன்பும் அறிவும் ஊட்டி
பாசமும் நேசமும் காட்டி
பக்தியிலும் பண்பிலும் எமை வளர்த்து
எம் பசிபோக்க உம் பசி மறந்து
கல்லும் மண்ணும் சுமந்தீர்களே
சோர்வை உம் வாழ்வில்
கண்டதில்லையே அப்பா
எமக்காக எல்லாம் செய்தீரே
இப்போது நீர் எமைவிட்டு சென்று
31ம் நினைவு நாள் ஆனதே

**அப்பா நீர் எம்மை விட்டுச் சென்றாலும் உம் நினைவாக உமக்காக எப்பொழுதும் ஆண்டவரிடம் செபிப்போம்.**

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி, கரவெட்டி

AD-46

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

# அல்லைப்பிட்டி ஆலயத்திருநாளில் கல்வி அறக்கட்டளை நிதியம் அங்குரார்ப்பணம்



தீவக மறைக்கோட்டத்திற்குட்பட்ட அல்லைப்பிட்டி புனித பிலிப்பு நேரியார் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்றது. திருவிழாத் திருப்பலியை யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். அன்றைய தினம் திருப்பலிக்கு முன்பாக அங்கு அமைக்கப்பட்டுவந்த ஆலயத்தின் பக்கக் கோயில் யாழ் ஆயர் அவர்களினால் ஆசீர்வதித்துத் திறந்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

திருநாள் திருப்பலியைத் தொடர்ந்து "தவக்கிறிஸ்" அறக்கட்டளை நிதியம் அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வும் அங்கு இடம்பெற்றது. இந்நிதியம் திரு சந்திரகுமார் தலைமையில் ஆயர் அவர்களால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இந்நிதியத்தினூடாக அல்லைப்பிட்டிப் பங்கில் கல்வி பயிலும் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான 125 மாணவர்கள் மாதாந்த உதவித்தொகையைப் பெறவுள்ளனர்.

# புங்குடுதீவில் இரத்ததான முகாம்



புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய இளையோர் மன்றத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இரத்ததான முகாம் கடந்த 16 ஆம் திகதி புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய முன்றலில் நடைபெற்றது. இவ் இரத்ததான முகாமில் சுமார் 30 பேர் கலந்து குருதிக் கொடை வழங்கியிருந்தார்கள். இந் நிகழ்வு புங்குடுதீவுப் பங்குத்தந்தை அருட்திரு எட்வின் நரேஸ் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்றது.

# வலைப்பாடு புனித இயூஜின் டி மசனட் ஆலயத் திருவிழா



வலைப்பாடு புனித அன்னாள் ஆலயப் பங்கின் துணை ஆலயங்களில் ஒன்றான புனித இயூஜின் டி மசனட் ஆலயத் திருவிழா கடந்த 22 ஆம் திகதி நடைபெற்றது.

திருவிழாத் திருப்பலியை அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்திரு றமேஸ் அடிகள் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். இந் நிகழ்வு வலைப்பாடு பங்குத்தந்தை அருட்திரு லியான்ஸ் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் சிறப்பாக நடைபெற்றது.

# சாவகச்சேரி மரியாயின் சேனையின் ஆண்டுவிழா



சாவகச்சேரிப் பங்கிற்குட்பட்ட புனித லிகோரியார் ஆலய மற்றும் அற்புத அன்னை ஆலய மரியாயின் சேனையினரின் 8வது ஆண்டு விழா கடந்த 21ஆம் திகதி சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயத்தில் நடைபெற்றது.

யாழ் மறைமாவட்ட மரியாயின் சேனை இயக்குநர் அருட்திரு ம. றெஜி இராஜேஸ்வரன் அடிகள் திருப்பலியைத் தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார். இந் நிகழ்வு சாவகச்சேரிப் பங்குத்தந்தை அருட்திரு ஞானரூபன் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் சிறப்பாக நடைபெற்றது.

# குளமங்காலில் வணக்கமாத இறுதி நிகழ்வு


வணக்க மாத இறுதியில் மரியாள் எலிசபேத்தம்மாளுக்கு உதவி செய்யச் சென்றது மாதிரி குளமங்கால் பங்கில் இருக்கக்கூடிய 14 வலயங்களிலும் உள்ள அனைத்து இல்லங்களுக்கும் குடும்ப சந்திப்புச் செய்த புனித கன்னி மரியாளின் 14 சொரூபங்களும் நல்லிணக்கபுரம் புனித அமைதியின் அரசி ஆலயத்திலிருந்தும், வறுத்தலைவிளான் அற்புதக் குழந்தை இயேசு ஆலயத்திலிருந்தும், மல்லாகம் புனித புதுமை மாதா ஆலயத்திலிருந்தும், குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்திலிருந்தும், பவனியாக மல்லாகம் புனித சதாசகாய மாதா யாத்திரைத்தலத்திற்கு எடுத்து வரப்பட்டு நன்றிப் பலியாகவும் இல்லத் தரிசிப்பில் அன்னையானவள் கேட்ட எல்லா வேண்டுதல்களையும் இணைத்து வேண்டுதல் பலியாகவும் சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

# குளமங்கால் பங்குமக்களால் தெல்லிப்பளை வைத்தியசாலையில் சிரமதானம்



குளமங்கால் பங்கு மக்கள் இணைந்து முன்னெடுத்த சிரமதானப்பணி கடந்த 22ஆம் திகதி தெல்லிப்பளை வைத்தியசாலை வளாகத்தில் நடைபெற்றது. 65 வரையான மக்கள் இணைந்து தெல்லிப்பளை வைத்தியசாலையில் அமைந்துள்ள புற்றுநோய் விடுதிப் பகுதி முழுவதையும் சிரமதானப்பணிமூலம் துப்பரவுசெய்து கொடுத்துள்ளதுடன் இச்செயற்பாடு பங்குத்தந்தை அருட்திரு பாஸ்கரன் அடிகளின் நெறிப்படுத்தலில் நடைபெற்றுள்ளது.

# "கூத்தருவி" நூல் வெளியீடு




கத்தோலிக்க திருஅவையின் கலைவளர்ச்சியில் நாட்டுக்கூத்துக் கலையூடாகப் பெரும் பங்காற்றி கடந்த ஆண்டு அமரத்துவமடைந்த அண்ணாவியார் பேக்மன் ஜெயராசா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினமும் அவரின் நினைவாக கூத்தருவி நூல் வெளியீடும் கடந்த 29 ஆம் திகதி யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள திரு மறைக்கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் நாடக நாட்டுக்கூத்துக் கலைஞர்கள் உட்பட பலரும் கலந்து அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினர்.

# குருநகர், அல்லைப்பிட்டிப் பங்குகளின் அன்பிய ஊக்குவிப்பாளர்களுக்கான கருத்தமர்வு



யாழ். மறைக்கோட்டத்தில் அமைந்துள்ள குருநகர் பங்கின் அன்பிய ஊக்குவிப்பாளர்களுக்கான கருத்தமர்வு கடந்த 21ஆம் திகதி சாட்டி புனித சிந்தாத்திரை அன்னை ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்திரு A. J. யாவிஸ் அடிகளின் தலைமையில் நடைபெற்றது.

யாழ். மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழு இயக்குநர் அருட்திரு A. மில்பர்வாஸ் அடிகள் நெறிப்படுத்திய இக்கருத்தரங்கில் குருநகர் மற்றும் அல்லைப்பிட்டிப் பங்குகளில் பணியாற்றி வரும் ஊக்குவிப்பாளர்கள் 50ற்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். இக்கருத்தமர்வில் பங்குகளில் முன்னெடுக்கப்படும் அன்பிய செயற்பாடுகளின் பயன்கள், அன்பிய செயற்பாடுகளிற்கு வரும் இடையூறுகள், புதிதாக செயற்படுத்தும் அன்பிய செயற்திட்டங்கள் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

# கடந்த வாரத்தில் நடைபெற்ற உறுதிப்பூசுதல் திருச்சடங்குகள்



இரணைப்பாலையில்



வலைப்பாட்டில்

இரணைப்பாலைப் பங்கில் கடந்த 03ஆம் திகதி யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற உறுதிப்பூசுதல் அருட்சாதனத் திருப்பலியில் 101 மாணவர்களும், பளைப் பங்கில் கடந்த 04ஆம் திகதி நடைபெற்ற உறுதிப்பூசுதல் திருச்சடங்குத் திருப்பலியில் 52 மாணவர்களும், முழங்காவில் பங்கில் கடந்த 08ஆம் திகதி இடம்பெற்ற உறுதிப்பூசுதல் அருட்சாதனத் திருப்பலியில் 248 மாண வர்களும், வலைப்பாடு பங்கில் கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற உறுதிப்பூசுதல் அருட்சா தனத் திருப்பலியில் 68 மாணவர்களும் உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2022ம் ஆண்டு யூன் மாதம் 05ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.